207

207 | 1-5

பிஸ்மில்லாஹி.

அபூநவாஸ்

அல்லது

அற்புத விகடம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS
19 JAN 1950

மூன்றாம் பதிப்பு

ஹாஜி M. S. A. மீரான் சாஹிபு
(S/o, ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது லெப்பை)
அவர்களால்

தனது
ஹாஜி மீரான் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

பெற்றுக்கொள்ளுமிடம்:
ஹாஜி மீரான் பிரஸ் & புக் டிபோ,
...ரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

1949 [அணா 12

Q7:3
N49

பிஸ்மில்லாஹி.

அபூநவாஸ்

அல்லது

அற்புத விகடம்

மூன்றாம் பதிப்பு.

ஹாஜி M. S. A. மீரான் சாஹிபு

அவர்கள்

தனது

ஹாஜி மீரான் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JAN 1950
MADRAS

பெற்றுக்கொள்ளுமிடம் :

ஹாஜி மீரான் புக் டிபோ,

15, பள்ளப்பன் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

ரிஜிஸ்டர்ட்] 1949 [அணா 12.

தஃலீமுல் இஸ்லாம்

ஹனபிய்யா

இஸ்லாம் மதத்தை மக்கள் கடைப்பிடித் தொழுகுவதற்குச் சாதகமாய், அதன் ஐம்பெருங்கடமைகளை ஒவ்வொருவரும் நன்கு உணரும்பொருட்டு எளிய தெள்ளிய நடையில் விபரமாக எழுதப்பட்டுள்ள இந்நூல் மக்கள் கரங்களில் தவருமல் இருக்கத்தக்கதாகும். ஹனபி, ஷாபி மதுஹபுகளை ஓம்பும் நம்மவர் இதன் தத்துவங்களையும், மஸ்அலாக்களையும் நன்கு புரிந்துகொள்ளும் பொருட்டு "தஃலீமுல் இஸ்லாம்" ஹனபிய்யா, ஷை ஷாபிய்யா என்று தனித்தனியாகப் பிரித்து, உத்தமபாளையம் ஜனுப் அல்ஹாஜ் மௌலவி S. S. முஹம்மது அப்துல் காதர் சாஹிப் பாக்கவீ அவர்களைக்கொண்டு விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இந்நூல் 1X16 டபுள் கிரவுன் சைஸில் வெள்ளை கிளேஸ் கடிதத்தில் அறபி பிளாக்குகளுடனும், புண்ணிய ஸ்தலப் படங்களுடனும் வெகு நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

இதன் விலை ரூ. 3—12—0

G13 1150

111207

EGMORE, MADRAS

தஃலீமுல் இஸ்லாம் ஷாபிய்யா
அச்சியிலிருக்கிறது.

ஷை ஹனபிய்யா, ஷாபிய்யா
(அரபுத் தமிழ்) அச்சாகி வருகிறது.

ஹாஜி மீரான் புக் டிபோ,
15, பள்ளப்பன் தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ் - 5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1950
MADRAS

பிஸ்மில்லாஹி.

அபூநவாஸ்

அகட விகட சாமர்த்தியக் கதை.

1-வது கிஸ்ஸா

அபூநவாஸின் வரலாறு.

* அபூநவாஸ் என்னும் அகட விகடப் புலவர் அரபி தேசமாகிய இருக்கு மாகாணத்தில் ஹம்தான் என்னும் பட்டணத்திலே குவாறஸம் என்கிற கோத்திரத்தில் பிறந்தவர். அவர் தகப்பனார் ஷாம், எமன், கூபா முதலிய தேசங்களில்போய் வியாபாரம் முதலானவைகள் செய்கிறவராக இருந்தார்.

அபூநவாஸ் தமது தாயார் வயிற்றில் கெற்பமாக இருந்து இரண்டரை வருஷங் கழித்துப் பிறந்தார். இவர் பிறந்த உடனே தாயார் இறந்து போனார்கள். அப்பால் அவர் தகப்பனாருடைய சவரக்ஷணையின் கீழிருந்து வளர்ந்து வந்தார். அபூநவாஸுக்கு எழு வயதானபோது அவர் தகப்பனார் அவரைக் கூட்டிக்கொண்டு வாதில் சுகாரு நகரத்

---

* அபூநவாஸ் என்பது அவருக்கு நவாஸ் என்று ஓர் ஆண் குழந்தை இருந்தது. அரபிகளின் வழக்கம்போல நவாஸுடைய தகப்பனே என்று கூப்பிடுவார்கள். அதனால் அவ்விதமாயிற்று.

திக்குப்போய், அங்கே உலகமெல்லாம் பேர்போன கவி ராயனுக இருந்த இம்றல் கைஸ் உடைய பேரனுகிய தாமர் லீன் என்கிற மகா வித்துவான் வசம் ஒப்பித்து சகல கலை ஞானங்களையும் கற்பித்துக் கொடுக்கும்படியாகடிச் சொல்லி அதற்காக அநேக திரவியங்களும் கொடுத்துவிட்டு வந்து விட்டார்.

அதன் பிறகு அபூநவாஸ் என்பவர் அந்த தாமர்லீன் என்னும் வித்துவானிடம் இருந்து நகுவு, ஸர்பு முதலான இலக்கிய இலக்கணக் கல்விகளும் கற்று பேர்போன அரபிய புராணங்களைப் பிரசங்கம் செய்யுவும், கற்பனையலங் காரங்களுடனே கவிதைகள் இசைக்கவும், கண்ட சுத்தி பாடவும், வசைகவிதைகளை இசைகவிதைகளாகப் புரட்டும் படியான சம்பிரதாயங்களிலெல்லாம் தேர்ச்சியடைந்தது மல்லாமல் அகட விகடங்கள் செய்வதிலும், தந்திரமாக ஜனங்களை ஏமாற்றுவதிலும் அம்றிபுனுல் உமையத்துல் அமீறு, முர்ரத்திபுனு இஸ்லான் முதலிய வல்லமை சாலி களுக்கும் மேலானவராக ஆய்விட்டார்.

எப்படி யென்றால் அரபி ராஜ்யத்திலுள்ள புராணங் களுக்குரிய உவமான சாஸ்திரங்களெல்லாம் அபூநவாஸ் என்பவராலேயே உண்டுபண்ணப்பட்டது. இவருடைய உவமானங்கள் எந்த ராஜ சபைகளிலும், எவ்விதப்பட்ட புலவர்களின் சமுகங்களிலும் சரி யென்று ஏற்றுக்கொள் ளப்படுமே அன்றி தள்ளப்படுவதே கிடையாது. அன்றியும், சங்கீதம் பாடுவதிலும் ஜனங்களின் ஆத்துமாவை மயங்கச் செய்து போடும்படியான இனிய குரலோசையுள்ளவர் எப் பேர்பட்ட கோபசாலியானவனும் அவரைப் பார்த்த மாத்திரத்தில் சிறிக்காமல் இருக்கமாட்டான். அவருடைய

கண்ணும் முகமும் யாவருக்கும் உடனே சிறிப்பை உண்டாக்கிவிடும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், கவிதைகள் பாடக் கூடிய சாமர்த்தியத்திலும, விகடம் நடிப்பதிலும், பிரசங்கம் செய்வதிலும், சங்கீதம் பாடுவதிலும் சாமர்த்தியத்துடன் பேசும் சமயோசிதத்திலும், அபூநவாஸைப்போல ஒரு மனிதன் அரபு தேசம் எங்கும் கிடையவே கிடையாது.

2-வது கிஸ்ஸா

ஒரு சமயம் அபூநவாஸ் எமன் ராஜ்யத்திலுள்ள ஒரு சுல்தானைக்கண்டு அவரிடம் சன்மானம் பெற்றுக்கொண்டு வரும்பொருட்டு அவர்பேரில் சில கற்பனையலங்காரமான கவிதைகள் பாடிக்கொண்டு போனார். போய் மந்திரி, பிரதானிகள், தளக்கர்த்தர்கள் முதலான கனவான்கள் கூடிய சபை ஆஸ்தான மண்டபத்தில் சென்று சிம்மாசனத்தின் மேல் வீற்றிருந்த சுல்தானைக் கண்டு ஸலாம் செய்து நல்மாராயத்துடனே, தாம் அபூநவாஸ் என்றும், தாம் இயற்றிய கவிதைகளின் பெருமைகளையும் சொல்லிக்ஷி, கவிதைகளை நல்ல இனிமையான சங்கீத சாமர்த்தியத்துடன் பாடிப் பிரசங்கித்தார். அவ்வளவு புகழ்ச்சிகளையும் காதாரக் கேட்டிருந்த அந்த வஞ்சகக்காரரான சுல்தான் திடீரென்று அபூநவாஸை நன்றாக உற்றுப் பார்த்துவிட்டு அப்பால் அங்கிருந்த நிலைக்கண்ணாடியில் தன்னையும் பார்த்தார். பார்க்கவே தாமும் அபூநவாஸும் முகச்சாடையில் யாதொரு வித்தியாசமின்றி அங்க அடையாளம் ஒன்றாக இருப்பதைக் கவனித்து தன் மனதில் நாம் இந்த சாமர்த்தியமான புலவனை இம்மஹா சபையில் வைத்து இகழ்ச்சி

செய்து பரிசு கொடாமல் அனுப்பிவிடவேண்டும் என்று திட்டப்படுத்திக்கொண்டு உடனே அபூநவாஸைப் பார்த்து, "ஓ! வித்துவானே! நாம் இருவரும் முகச்சாடை முதலிய அங்கலட்சணங்களில் யாதொரு பேதா பேதமுமின்றி சரியாக இருப்பதாலே ஒரு வேளை உங்கள் ஊரில் பஞ்ச காலம் வந்ததின் பேரில் உம்முடைய தாயார் இந்தப் பட்டணத்தில் வந்திருந்து காலங் கழித்துவிட்டுப்போய் இருக்கலாம் என்று உத்தேசிக்கின்றேன். அப்படி யாதேனும் இருக்கலாமா? உண்மையைச் சொல்லும்" என்று கேட்டார்.

எதிராளியின் சாமர்த்திய சம்பிரதாயம் தெரியாமல் மதி கெட்டுபோய் சொன்ன அந்த வஞ்சகக்கார சுல்தானை மகாவித்தை யாடம்பரராகிய அபூநவாஸ் நோக்கி, "மஹா ராஜாவே! அவ்விதம் எங்களூரில் பஞ்சம் வந்ததுமில்லை. எங்களூரிலுள்ள ஸ்திரீகள் தங்களிருப்பிடங்களை விட்டு அந்நிய நகரங்களுக்குப் போனதுங் கிடையாது. என் தகப்பனார் சில முக்கிய காரியங்களை முன்னிட்டு இந்தப் பட்டணத்தளவில் அநேக தடவை வந்திருக்கிறார்" என்று பதில் மொழி கொடுத்தார். அபூநவாஸ் பதில் கூறின உடனே அந்த ராஜ சபையில் இருந்தவர்களெல்லாம் கல்லென்று சிறித்து சுல்தானை ஏளனம் பண்ணினார்கள். சுல்தான் முகம் வாடி வெட்கித்தவராக அபூநவாஸை அழைத்து கொண்டுபோய் உயர்ந்த விபாஸாகளும், ஆயிரம் தங்க அஷ்றபிகளும் வெகுமதி கொடுத்து "புலவரே போதும் போதும்; உம்முடன் வாய்கொடுத்தது! போய் வாரும்" என்றனுப்பிவிட்டார். அபூநவாஸ் வரும்போது சுல்தானை நோக்கி "ராஜாவே! தங்களுக்கு இவ்வளவு சுமைபோதுமா! இன்னும் சுமை வேண்டுமா!" என்று பரிகாசம் பண்ணிவிட்டு வந்துவிட்டார்.

3-வது கிஸ்ஸா

சீரியா மாகாணத்தின் ராஜதானிப் பட்டணமாகிய திமஷக்கில் நவ்பலிபுனு அப்பாஸ் என்பவர் ராஜாவாக இருக்கும்போது, அவர் மாளிகையில் ஒரு கலியாணம் நடந்தது. அதற்காகப் பற்பல தேசத்து ராஜாக்களும் உயர் தரவியாபாரிகளும், பிரபுக்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

அதோடுகூட பற்பல ராஜ்யங்களிலிருந்தும் அரபிய வித்துவான்கள் வந்திருந்தார்கள். அத்துடன் இருகு தேசத்தின் சக்ராதிபதியாகிய சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்களின் சமுக வித்துவான்களான மஸ்ஹபு, றுக்காஸ் என்கிற மகா பேர்பெற்ற வித்துவான்களும், பகுதாதி லிருந்து வந்திருந்தார்கள். ஹம்தான் பட்டணத்திலிருந்து அபூநவாஸ் என்பவரும் போயிருந்தார். மேற்கூறிய வித்து வான்கள் எல்லோரும் திமஷக்குப் பட்டணத்தில் வந்து சேர்ந்த உடனே அபூநவாஸ் என்ற புலவரும் வந்திருக் கின்ற செய்தியைக் கேள்விபட்டவுடனே அவர்கள் யாவரும் ராஜாவின் சிங்காரப் பூந்தோட்டத்தில்போய் இருந்து கொண்டு ஹம்தான் தேசத்து மகா வித்துவானுகிய அபூ நவாஸின் சாமர்த்தியங்களைப் பேசிக்கொண்டிருந்து கடைசி யாக கீழ்க்கண்ட ஒரு சதியாலோசனையைத் தீர்மானஞ் செய்து கொண்டார்கள்.

நாம் ஒவ்வொருவரும் மடியில் ஒவ்வொரு கோழி முட்டையை மறைவாக வைத்துக்கொண்டு ராஜ சபைக்குப் போகவேண்டியது. போய் ராஜ வாழ்த்து, மங்களவாழ்த்து முதலிய ஸமஸ்தமும் முடிந்து சபையானது தள தள வென்றிருக்கும் சமயத்தில் அரசனை நோக்கி நாங்களெல் லோரும் பாடிய கடாக்ஷத்திற் கேட்கும்படியாக ஒவ்

வொரு அற்புதங் காண்பிக்கின்றோம் என்று கூறி உடனே நமது மடிகளில் இருக்கும் கோழி முட்டைகளை எடுத் தெடுத்து அரசனுக்கெதிரே காண்பித்துவிட்டு அபூ நவாஸையும் காண்பிக்கும்படியாக கேட்கவேண்டும். அப் போது அபூநவாஸ் தன்னிடம் முட்டை யில்லாததினாலே ராஜ சபையில் முகங் காட்டுவதற்கு வெட்கித்து அஞ்சி ஓடிப்போய் விடுவான். அதிலிருந்து அவனுடைய பிரக் யாதி குறைந்துபோய் நம்முடைய பிரக்யாதி அதிகப்பட்டு விடும். இதுவே சரியான ஆலோசனை யென்று எல் லோரும் ஒத்துக்கொண்டு அவ்விதமே ஒவ்வொருவரும் கோழி முட்டைகளை மடிக்குள்ளே மறைவாக ஒளித்து வைத்துக் கொண்டார்கள்.

இந்த சூதுகள் ஒன்றுமறியாத அபூநவாஸ் என்னும் புலவர் தாம் இதுபோன்ற யாதொரு பிரயத்தனமும் செய்யாமல் மறு நாள் சூரிய உதய காலத்தில் விவாஹ மங்களம் பாடும் பொருட்டு ராஜ சபைக்குப் போயிருந்தார். சபை பற்பல தேசத்து ராஜாக்கள், பிரபுக்கள், வர்த்தகர் கள் முதலானவர்களும், ராஜவம்ச பிரபுக்களும் வந்து கூடி ஏக அட்டகாசமாக இருந்தது. தங்கள் கபட காரியத்தைப் பேசி முடிவுகட்டிய புலவர்களும் வந்து கூடி மங்கள வாழ்த்து பாடிக்கொண்டிருந்தார்கள். அதிலொரு புலவன் சபையில் எழுந்து நின்றுகொண்டு அரசனை நோக்கி, 'இப்பொழுது மங்கள வாத்துகள் பாடியாயிற்று. இனி மேல் அற்புதங்களையுடைய கடாக்ஷ கவிதைகள் பாடப் படும். அவ்விதம் பாடிய பிறகு புலவர்கள் யார் யார் என்னவிதமான அற்புதங்களைக் காட்டுகிறார்களோ, அதே விதமாக மற்ற புலவர்களும் காண்பிக்கவேண்டும். அப் படிக் காட்டாதவர்களை இந்த மகா சபையில் அவமானப்

படுத்தி அனுப்பப்படும், என்று கூறிவிட்டு, திடீரென்று தன் கூட்டத்தார்கள் காண்பிக்கப்போகின்ற கோழி முட்டைகளைப் பற்றி விஷயம் அணுப்பிரமாணம் அடங்கிய கவிதை ஒன்றை திடீரென்று பாடினன். அவன் பாடி முடிந்தவுடனே அங்கு ஒரு மூலையில் இருந்த அபூநவாஸ் உடனே எழுந்து நின்றுகொண்டு தமது இரண்டு கைகளை யும் கூட்டி அக்கிளில் பட படவென்று அடித்து 'கொக்கரக்கோ! கோ!!' என்று கூவினர். ராஜா அவரைப் பார்த்து "அபூநவாஸே உமக்குப் பைத்தியமா? ஏன் இந்தச் சபையில் சேவல் கூவுகிற விதமாக அபய மிட்டீர்?" என்று கேட்டார். உடனே அபூநவாஸ் ராஜாவைப் பார்த்து, "இங்குக் கூடியிருக்கும் புலவர் களான பெட்டைக் கோழிகளுக்கெல்லாம் நான் முட்டை கொடுத்துவிட்டேன். வேண்டுமானல் அவர்கள் ஒவ்வொரு வரையும் சோதனைப் பண்ணிப்பாருங்கள். பட்டப் பகல் போல வெளியாகிப் போகும்" என்று கூறினர். அப்படியே ராஜா அங்கிருந்த புலவர்களை எழுந்திருக்கும்படியாகச் சொல்லி சோதித்தபோது அவர்கள் அரையில் அணிந் திருந்த வஸ்திரங்களுக்குள்ளே ஒவ்வொரு கோழி முட்டை கள் நழுவிக்கொண்டு வந்தன.

அதைக் கண்டவுடனே நப்பலிபுனு அப்பாஸ் என்னும் அரசர் அந்த மதிகெட்ட புலவர்களையெல்லாம் அவமானப் படுத்தி நகைத்துப் பரிசு கொடாமல் துரத்திவிட்டு மஹா தந்திர சாலியாகிய அபூநவாஸுக்கு அநேக ஆடையாபரண வெகுமதிகளெல்லாம் கொடுத்து அவரைப் புகழ்ந்து அனுப்பி விட்டார்.

4-வது கிஸ்ஸா

அபூநவாஸ் பகுதாதுக்கு வந்த காரணம்.

பகுதாது பட்டணத்து சக்கரவர்த்தியாகிய சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்களுக்கு சிரேஷ்ட தாரமாக சுபைதா என்ற ஒரு மகா செளந்தரீகவதியான பெண் வாய்த்தாள். அவர்களோ, சுல்தான் அபூஸைபர்காசீம் என்பவரின் குமாரத்தி; இவர்கள் தந்தை காலஞ் சென்ற பிறகு இவர்கள் பகுதாது பட்டணத்தைப் பெரிதும் விஸ்தார மாகக் கட்டி அதில் அநேக நகரங்களின் வியாபாரங்களையும், கப்பல் போக்குவரத்துகளையும் ஏற்படுத்தி அலங்காரப் படுத்தினார்கள். அன்றியும் அந்தச் சுபைதா அவர்களே அந்தப் பகுதாதில் ராணியாக இருந்து அநேக ராஜ்யங் களைத் தமது செங்கோலின் கிழ் யிருத்தி அரசாட்சி செய்துகொண்டு வந்தார்கள். இந்தச் சுபைதா என்கிறவர் களுடைய காலத்தில் தான் மிசிரிலுள்ள நீலாற்றின் மறு கால்களைப் பிரித்து, மக்கம், மதீனம், தாயபு, பைத்துல் முகத்தீஸ் முதலான நகரங்களுக்குத் தண்ணீர் பாயும் படியான ஜலவாஹிகள் தோண்டி விடப்பட்டன. அப்பால் சுல்தான் ஹாரூன் ரஷீது இஸ்பானியாவில் இருந்து படை யெடுத்து வந்து பகுதாது பட்டணத்தை முற்றுகை போட்டுப் பிடித்தபோது, அதன் ராணியாகிய சுபைதாவின் பேரழகானது அவரை மருட்டியதால் சுபைதாவை அவர் கள் விவாகம் செய்துகொண்டார்கள். சிறிது காலஞ் சென்ற உடனே சுபைதாவுக்கும், சுல்தான் ஹாரூன் ரஷீதுக்கும் இடையில் மனவருத்தங்கள் உண்டாகி சுபைதா வின் மேல் சுல்தான் வெறுப்படைந்து, சுபைதாவின் மாளிகைக்குப் போகாமலும், அவர்களை நல்லபடி நோக்கி

பாராமலும் ஓர் வஞ்சனையாக இருந்தார். அதனாலே சுபைதா விசனமடைந்து சுல்தானை வசியப்படுத்தும் படியான வழிகளை யோசித்துக் கடைசியாக ஹம்தான் நகரத்தில் உள்ள ஒரு பிரபுவுக்குக் கடிதம் எழுதி அங்கிருந்து அபூநவாஸை வரவழைத்தார்கள்.

அபூநவாஸ் பகுதாத் பட்டணம் வந்து சுபைதா நாயகியைக்கண்ட உடனே தம்மை வரவழைக்கப்பட்ட சங்கதிகளைத் தெரிந்து கொண்டு ஒரு நாள் சுல்தானுடைய அந்தப்புரத்துக்குச் சென்றார். அங்கே சுல்தான் தமது புஷ்ப மாளிகை மஞ்சத்தின்மேல் முகம் வாடினவராக சோர்ந்து நித்திரை செய்வதைக் கண்டு உடனே கையில் கிண்ணர கருவியை எடுத்து வாசித்தவராக பைத்துகளென்னும் சில அற்புதக் கவிதைகளைப் பாடினார்.

அந்தப் பைத்துகளின் அர்த்தங்களாவன :—

“ ஓ ! என் நாயகமே ! மகாலோக மண்டலாதிபராகிய சுலைமான் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பஞ்சனையின் மீது ஹூதுஹூதுப் பட்சியானது பல்கீஸூடைய சமாசாரங் கொண்டு தூது வந்திருந்தது போல மகாசௌந்தரிய கல்யாண குணங்களையுடைய எங்கள் ராணியாகிய சுபைதாவின் சமுகம் இருந்து நான் வந்திருக்கின்றேன்.

இன்னும் குளிர்ந்த பூங்காவனங்களின் வாசனை நுகர்ந்து இன்பம் மேவிட்டுப் பாடுகின்ற புல் புல் குருவியைப்போல தங்கள் சமூகத்து புல்புல்லாகிய அபூநவாஸ் பாடிக்கொண்டு நிற்கின்றான். அரசே ! சுபைதா என்னும் பூமாதேவியின் முகத்தில் பறந்திருக்கின்ற விசனமென்னும் இருட்டை மகிழ்ச்சி யென்னும் ஒன்றை வீசி யெழுந்தருளுகின்ற இளஞ் சூரியனைப்போல தேவரீர் சற்று தயவு செய்

தெழுந்தருளுங்கள். உங்கள் அன்பு என்கிற சூரிய உதயத்தைக் கண்டு தங்கள் சுபைதா நாயகியின் முகமென்கின்கிற செந்தாமரை மொக்கானது பளீரென்று விரிந்து மலரட்டும்!" என்று இவ்விதம் பாடிய கவிதையின் பொருட்சுவை சொற்சுவைகளை சுல்தானவர்கள் தங்கள் காதுகளின் வழியாகக் கேட்டவுடனே அவர்களின் வியாகூலத்தால் சோர்வடைந்திருந்த முகமானது குளிர்ந்த சந்திரனைப் போல் பிரகாசித்து 'எழுந்து அபூநவாஸே! இந்தப் பட்டணத்திற்கு எப்பொழுது விஜயஞ்செய்தீர்? மறுஹபா!' என்று முகமன் கூறிக்கொண்டு' "மிருதுவான மதுரஞ்சித வாயை இன்னம் ஒரு தடவை திறந்துபாடும்" என்று கட்டளையிட்டார்கள்.

சுல்தான் ஹாரூன் ரஷீது தமது கவிதையின் மீது ஆசைகொண்டு விட்டதை அபூநவாஸ் தெரிந்த உடனே மறுபடியும். சில கவிதைகளைச் சொன்னர். அவைகளின் அர்த்தமாவன:—

"மகாராஜ கெம்பீரரே! தாங்கள் மறுமைக்கு வேண்டுமான சகல காரியாதிகளையும் ஒழுங்கு பண்ணிக் கொண்டீர்கள். அவைகளின் பலன்களை மறுலோகத்தில் அநுபவித்துக் கொள்வீர்கள். இந்த உலகத்தில் நீங்கள் அநுபவிக்கும் கருமங்களைத் தவிர விடுகின்றீர்கள். என்ன கைசேதம்! மதுரமான சுக உண்டி குடிப்பு வஸ்துக்களை அருந்தி அநுபோகத்திற் கிணக்கமாகிய கன்னிகா ஸ்திரீகளை வாங்கி வைத்துக் கொள்வதல்லவோ காரியம்! மிருதுவாக வளர்த்தெடுத்த பிரம்பைப்போன்ற மேனி மினுமினுப்பும், பத்தரைமாற்று அபரஞ்சித தங்கக் கட்டிகளை உருக்கி வார்த்த தன்மையைப்போன்ற அழகு லட்சண

முடைய ஹிஜாஸுடைக்கட்டிலுள்ள பெண்களும், தீவிழுங்கும் நெருப்புக் கோழியின் அழகிய முட்டைகளைப் போன்ற வெண்மையும் சிவப்பும் கலந்த திவ்விய வர்ணமுடைய மதீனத்துப் பெண்களும், வஞ்சிக்கொடியைப் போன்ற இடையையும், மான் விழிகளைப்போன்ற கண்களையும் உடைய இருக்கு தேசத்து இள மாதர்களும் தங்களுடைய சுபைதாவின் பேரழகை இரவல் வாங்கும்படியான ரூபலாவண்ய முடையவளாயிற்றே! சுபைதா தமது இளம் பருவத்திற்காகத் தங்களுக்கு என்னதான் குற்றங் குறைகள் செய்தபோதிலும், அவளுடைய கைவிரல் ஒன்றில் பிரகாசித்து ஜொலிக்கின்ற அழகு ஒன்றுக்கு ஈடாகுமா! சுபைதாவின் சந்திர மண்டலம்போன்ற முகத்தைப் பற்றியா! அவளுடைய நளின உல்லாச நவரசமான மொழியைப் பற்றியா! அவளின் தாமரை இதழ்போன்ற பருத்த கண்களைப் பற்றியா! மிருதுவான காந்தளம் புஷ்பத்தைப்போன்ற அவளின் கரங்களைப் பற்றியா! சிவந்த வர்ணம் பொருந்திய ரோஜா புஷ்பம்போன்ற அவளது மிருதுவான பாதங்களைப் பற்றியா! இன்னும் அவளது பொன்னிறமும், இரத்தினப் பிரகாசமும், நீட்சியும் பொருந்திய கருங் கூந்தலைப் பற்றியா! தேனும், பாலும், பின்னடையும்படியான பஞ்ச வர்ணக் கிளிபோன்ற அவளது இன்பமான மொழிகளைப் பற்றியா! எதைப் பற்றியாவது இந்த வட்டமான உலகத்தில் என்னைப் போலுள்ள எத்தனை வித்துவான்களானாலும் வர்ணித்துச் சொல்ல முடிந்த வேலையா! நாகரிகம் பொருந்திய சுல்தானே! சுபைதாவின் ஒழுங்கான நளினத்தையும் அவளுடைய மதுரமோகமான சிரிப்பையும், முகரஞ்சிதமான வடிவையும், அலங்கிருதமான பகட்டையும், கஸ்தூரி மான்

போன்ற வெட்கத்தையும், ஆசையோடு அணைத்துப் பிடிக்கின்ற உல்லாசத்தையும், விமரிசையான சரச சல்லாபத்தையும், தாங்கள் என்ன அறிந்தீர்கள்! நான் என்ன சொல்லக் கூடும்! உலகத்தில் அரசராகப் பிறந்து இன்ப சுகங்களை அனுபவிக்க வந்த தேவரீர் தாங்கள் இப்பேர்ப் பட்ட பூலோக ரம்பை யென்னும் மகா அழகிய சுபைதாவின் முகம் வாடவிடுவது எனக்கே அளவிறந்த மன விசனத்தைக் கொடுக்கின்றது." என்று இவ்வாறு சுபைதாவின் அழகிய வர்ணங்களைப் பற்றிச் சொல்லி முடித்தார்.

அபூநவாஸின் வாய் மதுரமான நவரசங்களை சுல்தான் ஹாரூன் ரஷீது கண்டு அவரை நோக்கி "ஓய்! அபூநவாஸே! நான் உன்னைப்போன்ற சொல் வன்மையான ஒரு சம்பிரதாயனைக் கண்டதே யில்லை" யென்று சொல்லி அவரைத் தமது சமுகத்திலேயே எந்நாளும் வீற்றிருக்கும் படியாகச் சொல்லி திட்டப்படுத்தி அவருக்கு அநேக சன்மானங்கள் செய்து, பின் அவருடனே சுபைதா அவர்களின் மாளிகைக்குச் சென்று தானே வலிய உறவாடிக் கொண்டார்கள். அதன் பிறகு சுபைதா நாயகி தாம் சுல்தானை வென்றது அபூநவாஸின் யூக சாமர்த்தியத்தால் என்று கண்டு அபூநவாஸுக்கு ஒரு பொன் ஆபரணத்தை யெடுத்து நன்கொடை கொடுத்து முகமன் கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்திலிருந்து அபூநவாஸ் எந்த நாளும் பகுதாதில் ஹாரூன் ரஷீது சுல்தான் அவர்களின் தர்பார் வித்துவான்களில் ஒருவராக இருந்து வந்தார்.

—o—

5-வது கிஸ்ஸா

சிறிய குற்றத்தைப் பெரிய குற்றஞ்செய்து வென்ற விகடம்

ஒரு நாள் பகலில் சுல்தான் ஹாரூன் ரஷீது தங்கள் சமையல் அரையிலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது அபூநவாஸ் கறிவகைகளைக் கொண்டுவந்து பரிமாரு கிறவராக இருந்தார். அந்த சமயத்தில் பொன் பாத்திரம் ஒன்றில் வான்கோழி சூப்புக் கொண்டுவரும்போது எப் படியோ கால் தவறியதால் சூப்பு தளும்பி பொன் பாத் திரத்திலிருந்து ஒரு துளியானது சுல்தானுடைய சட்டை யின் மேல் சிதறிவிட்டது. உடனே சுல்தான் அவர் களுக்குக் கோபம் அதிகரித்து, அங்குப் பக்கத்தில் உருவிப் பிடித்த ஆயுததாரிகளாக நிற்கின்ற சேவகர்களை நோக்கி, 'இந்த அற்பப் புத்தியுடைய அபூநவாஸைப் பிடித் துச் சிறை கூடத்திற் கொண்டுபோய் அடையுங் கள்' என்று கட்டளை யிட்டார். உடனே அபூ நவாஸ் தன் கையில் இருந்த சூப்பு எல்லாவற்றையும் சுல்தான் அவர்களின் தலைமேல் சொளக்கென்று ஊற்றி விட்டுப் பொன் பாத்திரத்தை உருட்டி விட்டார். அப் போது சுல்தான் வாளை உறையினின்றும் உருவிப்பிடித்துக் கொண்டு அபூநவாஸை நோக்கி, கண்களில் அக்கினிப் பொறி எழும்பும்படியாக உருட்டிக் காட்டி, "அடா கெட்டவனே இப்படி ஏன் செய்தாய்? சொல்" என்று கேட்டார்கள், அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி, "மகா மாட்சிமை பொருந்திய நாயகமே! உலகமெல்லாம் தங்களை மகா கருணையும், நீதியுமுள்ள தயாளப் பிரபு என்று புகழ்ந்து கொண்டிருக்க, இப்போது தங்கள் விகட கவி ராஜனாகிய அபூநவாஸின் கையானது, எப்படியோ பிசகின

தின் பேரில் ஒரு சிறிய துளி சூப்பானது மேல் விழுந்ததற்காகச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டானும். இது ஒரு குற்றமா? என்று உலகத்தார்கள் உங்களைத் தூற்றி உங்கள் புகழில் புழுதியை யள்ளிப்போட்டு அநீதியான அரசனென்று சொல்லா திருக்கும்படியாகவும், தாங்கள் எனக்கு **வி**தித்த ஆக்கினைக்குத் தகுந்த குற்றம் என்னால் ஏற்படுகிறதற்காகவும் வேண்டி நான் இச்சூப்பு முழுவதும் தங்கள் தலையில் ஊற்றி முழுக்காட்டினேன். எனினும் இந்தப்பட்டத்தையுடைய பெரியதான * திகிரிஸ் நதியில் எப்போதுந் தண்ணீருக்குக் குறைவில்லை. சற்று எழுந்து வாருங்கள் போய் வரலாம் என்றான். அதைக் கேட்டவுடனே, சுல்தானுக்கு மிகவும் சந்தோஷமுண்டாகி "அடே சாமார்த்தியவானே! ஒரு சிறு குற்றத்தைப் பெரிய குற்றத்தால் நிவர்த்திப் பண்ணிக் கொண்டாயே" என்று சொல்லி மன்னித்து அநேக வெகுமதிகளைக் கொடுத்தார்.

6-வது கிஸ்ஸா

ஒரு நாள் சுல்தான் ஹாரூன் ரஷீது பகுதாதிலிருக்கும் திஜ்லா வென்கிற நதியில் மீன் பிடிக்கும்படியாகத் தூண்டி, கழை முதலிய கருவிகளுடன் போயிருந்தார். அவருடன் அபூநவாஸும் இருந்தார். வெகு நேரம் வரையிலும் காத்திருந்தும் மீன் அகப்படாததினாலே சுல்தான் மன வருத்தப்பட்டவராக, தமது அருகில் இருந்த அபூநவாஸை நோக்கி "அடே தரித்திரனே! உன்னைக் கூட்டிக்

---

* திகிரிஸ் நதி என்பதை அரபிகள் 'திஜ்லாலன்' என்பார்கள். இந்த நதியின் பேரில் தான் பகுதாது பட்டணம் இருக்கின்றது. திகிரிஸ் என்றது, இங்கிலீஷ் பாஷையில் உள்ளது.

கொண்டு வந்ததின் பேரில்தான் மீன் அகப்படவில்லை” என்று சொன்னார். அதை அபூநவாஸ் கேட்டவுடனே, சுல்தானை நோக்கி, “மகாப்பிரபு! அபூநவாஸ் என்பவன் திடனாக, தங்களைப்போன்ற ராஜாக்களிடத்திற் சென்று மதுரமான கவிதை பாடுகிறவனாக இருக்கிறதினாலே அவன் எப்பொழுதும் சீமான் தனத்தை யுடையவனாகவே இருக்கின்றான். வழிவழி வம்சமாக சக்கிரவர்த்திகளாகப் பிறந்து பூங்காவனங்களால் சூழப்பட்ட பங்களாக்களில் இருக்கப் பட்ட பொன்விதானப் பட்டுகளின் பரமதானிக் கட்டில் களில் யௌவன ரூபமுடைய ஸ்திரீகளைத் தூங்கவைத்து விட்டு அவர்களுடன் சயனித்துச் சுகத்தை யநுபவிக்காம லும், சங்கீதப் பெண்களின் இனிய குரலோசைகளைக்கேட்டு மனதுக்கு ஆனந்தங் கொடாமலும், பிரஜைகள்வந்து நின்று முறையிடுகிற முறைப்பாட்டைக்கேட்டு நியாயந்தீர்க்காம லும் வீண் பொழுது கழித்து பாவம்! அற்ப சொற்ப ஆத் மாக்களாகிய மீன்களைப்பிடித்துப் பிழைக்கலாமென்றுவந்து, உட்கார்ந்து உறங்கிக்கொண்டிருப்பவனே மஹா தரித்திர வாளன்” என்று கூறினார். உடனே சுல்தான் களகளவென்று சிரித்துஅபூநவாஸின் யூக தந்திர வார்த்தைக்காக நிரம் பவும் மெச்சி இனி இவ்விதமான ஈன வேலைகளைச் செய்யக் கூடாது என்று மனதில் உறுதி படுத்தினார்.

7-வது கிஸ்ஸா

ஒரு நாள் சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்கள் தங்கள் புஷ்ப தூளிகாமஞ்சத்தில் படுத்து நித்திரை செய்யும் போது தங்கள் வாயிலுள்ள பற்களெல்லாம் ஒரு மிக்க விழுந்து போனதாகக் கனவுகண்டு திடுகிட்டு விழித்து எழுந்தார். எழுந்திருந்து சங்கீதப் பெண்களை வரவழைத்து அன்றிரவெல்லாம் ராஹஸாஹித்யத்திலேயே பொழுது கழித்து, விடிந்தவுடனே தமது தர்பாரில் உள்ள உலமாக்களையும், வித்துவான்களையும், வானசாஸ்திரிகளையும் ஆள் விட்டழைத்து தாம் கண்ட சொப்பனத்திற்குப் பலன் கேட்டார்கள். அவர்களெல்லோரும், நுஜூம் ஸாஸ்திரங்களைப் பார்த்துவிட்டு 'சுல்தானே! அமீறுல் முஉமினீனே! தங்களைச் சேர்ந்த இனபந்து ஜனங்களெல்லாம் இந்த வருஷத்திலே இறந்து போவார்கள்' என்று ஒரே விதமாகச் சொல்லி விட்டார்கள். உடனே சுல்தானுக்கு அக்கினி போன்ற கோபமீறி அந்த சாஸ்திரிகளை யெல்லாம் பிடித்து வெட்டிவிடும்படியாய் ஆக்ஞாபித்தார்கள். அந்த ஸமயத்தில் அபூநவாஸ் என்பவர் எழுந்து நின்றுகொண்டு சுல்தானை நோக்கி 'யாசெய்யிதீ! என் நாயகமே! அந்தக் கனவின் பலனுவது வேறொன்றுமல்ல. தங்கள் சிறப்பான குடும்பத்தார்களைப் பார்க்கிலும் தங்கள் ஆயுசு அதிகமாக நீடித்திருக்கும்' என்றார். உடனே சுல்தான் அபூநவாஸ் கையைப் பிடித்து முத்தங்கொடுத்து அவரை மெச்சி அதிகமான நன் கொடைகளும், வெகுமானங்களுங் கொடுத்து ஒரு மாளிகையும் கட்டிக் கொடுத்தார்.

8-வது கிஸ்ஸா

ஒரு நாள் சுல்தான் ஹாரூன் ரஷீது வேட்டைக்குப் போகும்படியாகப் பிரயாணப்பட்டு உதயகாலையில் அபூநவாஸின் வீட்டின் அருகே வந்து கொண்டிருந்தார்கள். அந்த சங்கதியை முன்னமே அறிந்திருந்த விகடராகிய அபூநவாஸ் மெதுவா யெழுந்து தமது வீட்டுத் தெருவாசற் கதவை ஒரு பக்கமாகத் திறந்து வைத்துக்கொண்டு கதவின் மறைவிலே ஒளித்துக் கொண்டிருந்த அபூநவாஸ் வீதியில் சுல்தான் வருவதைக் கண்டு திடீரென்று கதவை நீக்கிக்கொண்டு தெருவில் ஓடிவந்து இடி முழக்கம்போன்ற அபயசப்தத்துடனே ஸலாம் சொன்னார். அவருடைய பேரிடி சப்தத்தால் சுல்தான் சவாரியாயிருந்த ஜாதிக் குதிரை கனைத்து மருண்டெழுந்ததால் சுல்தானுடைய தலையில் இருந்த கிரீடமானது நழுவிக் கீழே விழுந்தது. அதை அபூநவாஸ் ஓடிப்போய் எடுத்து மரியாதையுடன் சுல்தான் வசம் கொடுத்தார். அதுகண்டு சுல்தான் தமது சேவகர்களைக் கூப்பிட்டு "இந்தத் துன்மார்க்கனாகிய அபூநவாஸை தளையிட்டுக் கட்டிக்கொண்டுபோய்ச் சிறைச் சாலையில் போடுங்கள்" என்று உத்தரவிட்டார். சேவகர்கள் அவ்விதமே வந்து அபூநவாஸின் கைகளையும், கால்களையும் இறுகக் கட்டினார்கள். அப்போது, அபூநவாஸ் சுல்தான் அவர்களை நோக்கி, 'என் நாயகமே! இவ்விதமான தண்டனை விதிப்பதற்கு நான் தங்களுக்கு என்ன குற்றஞ் செய்தேன்?' என்று இரங்கிய மனத்துடன் கேட்டார். அப்போது சுல்தான், "ஒன்றுக்குமல்ல. கெட்ட மூதேவியான உன் முகத்தில் அதிகாலையில் நான் விழித்த முகூர்த்தத்தினாலே என் தலையிலிருந்த

தாஜானது தவறிவிழுந்தது. அதனாலே இனி நான் துஷ்ட ஜந்துக்கள் சஞ்சாரஞ் செய்கின்ற இடங்களுக்குப் போனால் என்ன ஆபத்துகள் வந்து சம்பவிக்குமோ! தெரியவில்லை. இனிமேற்கொண்டு நீ காலையில் என் சமுகதில் வராதிருக்கும்படியாக இவ்விதம் சிறை கூடத்திற் கனுப்புகிறேன்." என்றார். அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி "சுல்தானே! தாங்கள் என் சமுகத்தில் விழித்ததினால் இன்னும் ஓர் ஆபத்தையும் நீங்கள் அடையவில்லை. நான் தூங்கி விழித்ததும் திடீரென்று தங்கள் முகத்தில் விழித்த முகூர்த்தத்தாலே இப்பேர்ப்பட்ட கடுந்தண்டனையான ஆபத்தையடைகின்றேன். தங்கள் முகத்தின் முகூர்த்த தோஷத்தைப் பார்க்கிலும் என் முக முகூர்த்தமானது மிகவும் அழகானதாக இருக்கின்றது" என்று சொன்னார். உடனே சுல்தான் அவர்கள் குலுங்கிக் குலுங்கிச் சிறித்துக்கொண்டு அவருடைய கட்டுதளைகளை அவிழ்த்து விட்டு மன்னித்தார்கள்.

9-வது கிஸ்ஸா

மற்றொரு நாள் உலோபிகளில் ஒருவன் அதாவது ஈயாத புலவர்களிலொருவன் அபூநவாஸைக் கூட அழைத்துக் கொண்டு ஒரு கடையை வாடகைக்கு பிடிக்க வேண்டுமென்று பஜாருக்குப் போய் அங்கு ஒரு காலியா யிருந்த ஒரு கடையைக் கண்டு அதன்மேல் ஏறி உட்கார்ந்து இந்தக் கடையில் இன்ன இன்ன சரக்குகள் நல்ல விற்பனையாகும் என்று இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது, அந்தக் கடையின் முன்னே சில பிச்சைக்காரர்கள் வந்து நின்று பிச்சை கேட்டார்கள். அவர்களை நோக்கி

அந்த உலோபியானவன் "தயவு செய்து நீங்கள் மற்ற கடைகளுக்குப் போங்கள்" என்று சொல்லி விட்டான். அப்பால் சில பக்கீர்கள் வந்து ஸலாம் செய்தார்கள். அவர்களையும் இப்போது ஒய்வு இல்லை யென்று சொல்லி அனுப்பி விட்டான். அப்பால் சில குருடு, சப்பாணி, முடவர்கள் வியாதியஸ்தர்கள் வந்து யாசகங் கேட்டார்கள். அவர்களையும் நோக்கி "உங்கள் கண்ணுக்கு நான் ஒருவன் தான் தெரிந்ததோ! வேறே யிடம் பாருங்கள்" என்று துரத்தி விட்டு, தன் அருகில் இருந்த அபூநவாஸைப் பார்த்து 'ஏது இந்தக்கடை எனக்குத் தோதுப்படாது போலிருக்கிறது. வேறு கடையைப்பாருங்கள்' என்று சொன்னான். அபூநவாஸ் அந்த ஈயாப்பத்தனை நோக்கி, "ஓ! தோழரே! இதுவே நல்ல வசதியான இடமாக இருக்கின்றது. இதைவிட நல்ல கடை யெங்கே நமக்கு அகப்படும்? அகப்படாது. இதுதான் சரியான கடை" யென்று வற்புறுத்தினார். அதற்கந்த பகீலன் அபூநவாஸை நோக்கி அதற்கல்ல, "இந்தக் கடையில் ஏழை எளிய ஜனங்கள் மிகுதியாக வருகின்றார்கள். அதனால் தான் இது எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொன்னான். அப்போது அபூநவாஸ் அந்தப் பகீலனைப் பார்த்து "ஹா ஹா! தோழரே இதற்குத்தானா மலைக்கிறீர்கள். இதைவிட பதினாயிரம் பங்கு மிஸ்கீன்கள் வந்து பிச்சை கேட்டாலும் ஒரு செப்புச் சல்லியும் குறையாமல் கொடுத்துக் கொண்டே வருகின்ற தாங்கள் 'இப்பொழுது சமயமில்லை; போய் வாருங்கள்' என்று சொல்லி விடுகிற திரவியம் உங்கள் நாவிலிருக்கும்போது ஏன் மலைக்கின்றீர்கள். மலையாதிருங்கள்!", என்று சொல்லினார். உடனே அந்த பகீலன் வெட்கப்பட்டுப்போய் விட்டான்.

10-வது கிஸ்ஸா

ஒருபோது பகுதாது நகரத்தின் அத்தர் பஜாரில் நின்று கொண்டிருந்த ஓர் அழகிய வாலிபப் பெண்ணை சீழுடன் பருத்த உதட்டையுடைய ஒரு மனிதன் கண்டு அவள் அருகிற் போய் "ஏ! எனக்கின்பமான பெண்ணே! நீ என்னை நிக்ஹாஹு செய்து கொள்கிறாயா?" என்று கேட்டான். அதற்கவள் அவனுடைய பெருத்த உதட்டை பார்த்துச் சம்மதிக்கவில்லை. மறுபடியும் அவன் அவளை நோக்கி "ஆஷிக்கானவளே! நான் நல்ல நடத்தையுடைய வன். நல்ல சம்பாத்திய முடையவன். உன்னால் எனக்கு என்ன குற்றம் குறைகள் முதலிய எவ்வளவு வருத்தங் கள் வந்தபோதிலும் அவ்வளவும் மனங் கோணாமல் சகிப் பேன். ஆனதால் நீ நல்ல அதிர்ஷ்டமுள்ளவளாக இருந் தால் என் சொல்லுக் கிணங்கு" என்று இனிமையாகச் சொல்லுவதை அங்கு ஓர் இடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த அபூநவாஸ் ஓடி வந்து, அந்த மனிதனை நோக்கி "ஆமாம்! நீ சொல்லுவது மெத்தவும் சரிதான்; நாற்பது வருஷக் காலங்களாக இவ்வளவு பெரிய சீழ் வடி கிற உதட்டைத் தூக்கிச் சுமக்கின்ற உனக்கு ஒரு பெண் ணால் வருகிற வருத்தங்களைச் சுமப்பது ஒரு பெரிய காரிய மில்லை" என்று சொன்னார். உடனே அந்தப் பெண் குலுங்கச் சிரித்துக் கீழே விழுந்து விட்டாள். அவனும் தலை குனிந்து கொண்டு போய் விட்டான்.

11-வது கிஸ்ஸா

ஒரு நாள் பூர்ணச் சந்திரன் பிரகாசிக்கின்ற இரவில் சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்கள் நித்திரைவராமல் தமது மாளிகையின்மேல் சுற்றி உலாவிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் அவர்களின் சுற்றத்தார் பெண்களில் நிரம்பவும் அழகும் தேகக் கட்டுமுடைய ஒரு வாலிபப் பெண்ணனவள் மையல் பெருகி மோக மயக்கங் கொண்டவளாக மிருதுவான வஞ்சிக்கொடியைப்போல் அசைந்தசைந்து ஆடி ஆடிக்கொண்டு வருவதை சுல்தான் கண்டு உடனே காமவெறி கொண்டவர்களாக அவள் அருகிற் போய் "என் ஆஷிக்கான மயிலே! நீ என் அழைப்புக் கிணங்கு" என்று அழைக்க, அவள் தன் ஸ்தனங்களைக் குலுங்கச் செய்து நடை யுடை பாவனையைக் காட்டி சுல்தானை மயங்கச் செய்து "யா செய்யிதீ! என் நாயகமே! இன்றிரவு வேண்டாம் நாளைக்கு ஆகட்டும்." என்று சொல்லினள். மீறிய மோக வெறியால் சுல்தான் தாமதப்படாமல் அவள் மேலே பலாத்காரமாக மோதி விழுந்து இருகத்தழுவி நிறுத்தினர்கள். அந்தத் தந்திரக்காரி சுல்தானுடைய கையில் தன் தாவணியையும், அரையிலணிந்த ஸல்லா பட்டாடையும் நழுவ விட்டு விட்டு அப்படியே ஒரு மயில் பறந்த மாதிரியாக உருவிக்கொண்டு ஓடிப்போய் விட்டாள். பிறகு, சுல்தான் காம வெறியால் அடிப்பட்டு ஏமாந்தவர்களாகத் திரும்பி வந்து தன் சயன மண்டபத்தில் படுத்துக்கொண்டு அந்த இரவு முழுவதும் அந்த வாலிபப் பெண்ணின் ரூபலாவண்ணியத்தையும், மேன்மையான பகட்டையும், அவள் சரச சல்லாப உல்லாசத்தால் மருட்டினதையும், அவளது மோகமான விழி

நோக்கங்களையும் நினைத்து நினைத்து நித்திரை வராதவராக மிகவுந் துயரப்பட்டுக் கொண்டு கிடந்தார். அப்பால் சூரியோதயமாகிப் பொழுது விடிந்தபோது நீங்காத காமத்துடன் எழுந்து அந்தப் பெண் வசிக்கின்ற மாட கூடத்திற்குப்போய் அவளைக் கண்டு "ஏ! என் மனதைக் கொள்ளை கொண்ட சுந்தரியே, என்னிடம் இராத்திரி சொன்ன வார்த்தையை நிறைவேற்றிவை" என்று கேட்டார்கள். அதற்கவள் சுல்தானை நோக்கி,

"கலாமுல்லைலி எம்ஹூன்னஹார்" அதாவது:—இரவு சொன்ன வார்த்தையைப் பகலானது அழித்துவிடும் என்று சொன்னாள். சுல்தான் அவர்கள் அந்த ஸமர்த்தியின் வாக்கியத்தைக் கேட்டு உடனே அப்படியே மதி மயங்கி நின்று வெட்கித்தவராக, தமது ஆஸ்தான மண்டபத்தில் வந்து வீற்றிருந்துகொண்டு ஜாபர் என்னும் தமது முதல் மந்திரியை விட்டு கண்ட சுத்தி பாடக்கூடிய மகாத் தேர்ச்சியான புலவர்களில் மூன்று பேர்களை அழைத்து வரும்படியாக உத்தரவு செய்தார்கள். அவ்விதமே ஜாபர் என்கிற மந்திரிபோய் ஒவ்வொரு வித்வான்களையும் நன்றாகக் கவனித்துப் பார்த்துக் கடைசியாக அரபு ராஜ்யத்தில் நிகரற்ற பெரும் புலவர்களான மஸ்ஹூபு, றுக்காவஸீ, அபூநவாஸ் என்னும் இந்த மூன்று பேர்களையும் கூட்டிக் கொண்டு வந்து சுல்தானுடைய சந்நிதானத்தில் விட்டார்.

மந்திரி கொண்டுவந்துவிட்ட மகா ஸம்பிரதாய வித்வசிரோன்மணிகளாகிய அந்த மூன்று புலவர்களையும், சுல்தான் அவர்கள் நோக்கி, "நீங்கள் ஒவ்வொருவரும், அரபி பாஷையில் ஒவ்வொரு கவிகள் பாடவேண்டும். அவைகளின் கடைசி அடிகளில் 'கலாமுல்லைலி, எம்ஹூன்ன

ஹார்.' என்று முடியவேண்டும். அதன் மேலடிகளில் என் மனதில் இருக்கும் சந்தர்ப்பத்தைச் சொல்லவேண்டும். சீக்கிரம் பாடுங்கள்" என்று சொன்னார்கள்.

அதைக்கேட்ட உடனே 1-வது மஸ்ஹறபு என்கிற புலவர் மூன்று கவிதைகளைப் பாடினார். அவைகளின் அர்த்தங்கள் கீழ்வருமாறு :—

"அரசரே! அவள்பேரில் நீர் கொண்டிருக்கின்ற மையலால் உமது மனமானது பதரிச் சரி படாதிருக்கின்ற நிலைமையில் நீர் எவ்விதம் அவளுடைய ஆசையைவிட்டு நீங்குவீர்? ஒருபோதும் நீங்கமாட்டீர். அவள் யாரையுங் கண்டிருக்கமாட்டாள். அவளை ஒரு வாலிபனுங் காண சக்தி பெறமாட்டான். அப்படிப்பட்ட ஒரு வாலிப ஸ்திரீயானவள் உம்மைத் தனது பகட்டாலே மயக்கி காம வெறியான சாராயத்தைப் புகட்டிவிட்டாள். அந்த வெறியால் நீர் அவளைக் கண்டு சரகினபோது, அதாவது இரவு சொன்ன சொல்லை நிறைவேற்றச் சொன்னபோது அவள் 'இரவு சொன்ன மொழியைப் பகலானது அழித்துவிடும்' என்றாள்" என்பதாம்:

2-வது றுக்காவீ, என்ற புலவர் இரண்டு கவிதைகளைப் பாடினார். அவைகளின் பொருளாவன.

"அடா தோழனே! நீ என்னைப் பழிக்கின்றாயோ, பழிக்காதே. என் மனமானது என் ஆசை நாயகியைத் தேடி காமவிசாரம்பெற்றிருக்கையில், அவள் அஞ்சனத்தின் நிறம்போன்ற கருவிழியையும், ஆணி முத்தைப்போன்ற வெள்ளை விழியையுமுடைய தனது கண்ணென்ற மோக வலையால் வீசியென்னைச் சிறைபிடித்துக் கொண்டதால் என் மனமானது கட்டுக்கடங்காமல் அவளை நான் மருவிக் கொள்ளத் தேடிப் போனபோது 'இராப்பேச்சைப் பகல் அழித்துப்போடும்' என்று சொன்னாள்" என்பதாம்.

4

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE 111261

3-வது அபூநவாஸ் என்ற புலவர் மூன்று கவிகள் இயற்றினர். அவைகளின் அர்த்தமாவன :—

" அடே பிரியமான நண்பனே! வட்ட வடிவுள்ள குளிர்ந்த நிலாவானது ஆகாயத்தை பூரணமாக்கிவைக்குஞ் சமயத்திலே, என் ஆஷிக்கான பதுமினியானவள் விரக தாரியாக என் முன்னே தோன்றினுள். அவளது ஒய்யார நடை, அவளுடைய மையலை அலங்காரமாக்கியது. அவள் அன்ன நடை சாயலில்ஜிலுஜிலுப்பான தென்றற் காற்றனது வீசியதினுலே அவளணிந்திருந்த மிகப்பிரகாசமுடைய மேற் போர்வை நழுவ அவளுடைய ஆபரணமணியப் பெற்ற பார்பு என்கிற பணரில் இரண்டு திரட்சியான மாதுளங் கணிகள் குலுங்கித் தோன்றவும், அவளது இடை வஸ்திர மானது தளர்ந்து விழவும் கண்டு எனது காமத்தீமேலிட்டு என் மனம் அலைவுற்றது. பின்பு நான் அவள் அருகிற் சென்று 'என்ன சொல்கின்றுய்? என் ஆஷிக்கான மயிலே!' என்று லீலைக்கு வருந்தி அழைக்க, அவளுடைய பவளம் போன்ற வாயைத்திறந்து 'இப்பொழுது என்ன அவசரம்? பொழுது விடியட்டுமே!' என்ருள். பின் அவளுடைய சொற்படி சென்று விடிந்த பின் கேட்க 'அவள் இரவு சொன்ன மொழியைப் பகல் அழித்துப்போடும்' என்ருள்" என்பதாம்.

இவ்விதம் அபூநவாஸ் உள்ளங்கை நெல்லிக்கனிப் போல் ஒன்று விடாமல் நடந்த விபரங்களை யெல்லாம் படி படியாகச் சொன்னதை சுல்தான் அவர்கள் கேட்டு அபூநவாஸின் மேல் கடுங் கோபங்கொண்டு அபூநவாஸுடைய சிரசை வாங்கும்படியாகவும், முன்னர் கவிகள் பாடிய இரண்டுபுலவர்களுக்கும் ஆயிரம் ஆயிரம் தங்க நாணயங்கள் கொடுத்தனுப்பும் படியாகவும் கட்டளை யிட்டார்கள். அந்

தக் கடுந் தண்டனையைக் கேட்ட உடனே அபூநவாஸ் எழுந்து சுல்தானுடைய பாதத்தில் விழுந்து தஸ்லீம் செய்து" ஏன் இப்படிக் கட்டளை இட்டீர்கள்? நான் தங்களுக்கு என்ன குற்றஞ் செய்தேன்!" என்று கேட்டார். அதற்கு சுல்தான் "அடே துன்மார்க்கா! நேற்றிரவு எனக்கும் ஒரு ஸ்திரீக்கும் இடையில் நடந்த சிற்றின்பமான இரகசியத்தை நீ எங்கோ ஒரு மூலையில் ஒளிந்துகொண்டு பார்த்தாய் போலும்! அந்தக் குற்றத்திற்காக வேண்டி நான் இவ்விதஞ் செய்தேன்" என்றார். அதை அபூநவாஸ் கேட்டவுடனே குர்ஆனை எடுத்து தன் தலைமேல் வைத்து 'இந்த வேதத்தின்பேரில் ஆணையாக நான் அவ்விதம் பார்க்கவே இல்லை. உருவிய வாளாயுதங்களுடனே எத்தனையோ ஆயிரம் காவல் வீரர்கள் நின்று பாராக்காக்கின்ற எல்லைகளை யெல்லாம் கடந்து இந்த அற்பன் எப்படி வந்து விடுவான்? இது தங்களுக்குத் தெரியாதா! நாயகமே" என்றார். அதற்கு சுல்தான் 'அப்படியானால் அந்த ரகசியம் ஒன்றேனும் தவறாமல் உன் கவிதையில் வந்த காரணமெப்படி?' என்று கேட்டார்கள். அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி 'நாயகமே தாங்கள் முடிவில் இவ்விதமாக வரவேண்டுமென்று சொன்ன அரும்பதச் சொல்லை அநுசரித்து அத்துடன் தங்கள் முகக் குறியையும் நிரைதூக்கிப் பார்த்து கீழ் வருகிற பதத்துக்கு மேல் வரக் கூடியது இப்படித்தான் இருக்கவேண்டும் என்கிற இலக்கண சம்பிரதாய யுக்தியால் பாடினேன். இதுவேயன்றி மற்றப் படி ஒன்றுமே நான் அறியமாட்டேன்' என்று இனிய மதுரமான வார்த்தைகளாகச் சொல்லிக் கெஞ்சினார். அதை சுல்தானவர்கள் கேட்டு 'மெய்தான். அபூநவாஸ் தனது சாமார்த்திய வித்வதனத்தால் அப்படிப் பாடினார்' என்று கண்டு ஷை தீர்ப்பை அழித்துவிட்டு அபூநவாஸுக்கு அந்த இரண்டு புலவர்களின் முன்னிலையிலேயே நான்காயிரம் தங்க நாணயங்கள் கொடுத்தனுப்பும்படியாக உத்தரவு செய்தார்கள்.

12-வது கிஸ்ஸா

ஒருபோது சுல்தான் ஹாரூன் ரஷீதவர்கள் சீரியா மகாணத்திற்கு சஞ்சார விஜயஞ் செய்திருந்தார்கள். அங்கு ஒரு பட்டணத்தில் சுத்தக் கருப்பான ஒரு ஹபஷிப் பெண்பேரில் மோகப்பட்டார்கள். அவளை விலேக்கு அடிமையாக வாங்கிக்கொண்டு வந்து சுபைதாநாயகி அவர்களின் மாளிகைக்கு மேலான ஒரு மாளிகையை அவளுக்குக் கட்டிக் கொடுத்து அவளை மிகவும் மேலான பெண்ணென்று தங்கள் மனைவி மார்களுக்கிடையில் பேசிக் கொண்டார்கள். அந்தச் செய்தியை அபூநவாஸ் கேட்டு அதற்குத் தகுந்த சமயம் வரட்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். இது நிற்க, ஒடுக்கத்துப் புதன் கிழமையின் கொண்டாட்டத்திற்காக ஒரு நாள் சுல்தான் திஜிலா நதியில்போய் ஸ்நானபானஞ், செய்வதற்காக ஜாபர் மந்திரி, பிரதானி சில தளகர்த்தர் முதலிய அநேக பெரிய கன தனவான்களின் கூட்டத்துடனே புறப்பட்டுப் போகிறார்கள் என்கிற சங்கதியை அபூநவாஸ் கேள்விப்பட்டு வெகு விரைவாக ஓடிப்போய் பஜாரில் ஒரு கருப்பான நாயைக் கிரயத்திற்கு வாங்கிக்கொண்டு வருகிற வழியில் ஒரு வாசனையுள்ள பொன்நிறம் பொருந்திய சோபும் வாங்கி வைத்துக்கொண்டு அங்கிருந்து ஓட்டம் ஓட்டமாக வோடிப் போய் திஜிலா நதியின் நீராடு துறையிற் சென்று கருப்பு நாய்க்கு நல்ல இனிப்புள்ள ஆகாரங்களெல்லாங் கொடுத்து அதன் நெற்றியில் முத்தங் கொடுத்து நீரில்விட்டுக் குளிப்பாட்டி யெடுத்து அங்கு கிடந்த கல்லின் மேல் பற பற வென்று தேய்த்தார். தேய்க்கும்போது நாய் 'வாள் வாள்' என்று சப்தம் போட்டுக் கொண்டிருந்தது. அந்த

சமயத்தில சுல்தானும் அவர்களுடைய பரிவாரங்களும் அங்கே வந்துவிட்டார்கள். படித்துறை யிடத்தில் நாயின் குரலோசையை சுல்தான் கேட்டு இதென்ன அதிசயம்! போய் பார்க்கலாம் வாருங்கள்' என்று எல்லோரையுங் கூட்டிக்கொண்டு வந்து பார்க்க, அங்கே அபூநவாஸ் ஒரு கருப்பு நாயைத் தேய்க்கக் கண்டு 'அடா அபூநவாஸே! என்ன செய்கிறாய்?' என்று சுல்தான் கேட்டார்கள். அதற்கு அபூநவாஸ் 'நான் வீண் வேலை பார்க்கவில்லை. அந்தோ! இது கருப்பு நாயாக இருக்கின்றது. இதை வெள்ளை நாயாக மாறிவிட்டால் வீட்டுக்கு அழகாக இருக்கும் என்று இப்படி சோபு தடவி கழுவுகின்றேன்' என்றார். அதைக்கேட்ட உடனே 'அடா மூடனே! கற்ற கல்வி யெல்லாம் உன்னைவிட்டுத் தொலைந்து போயிற்றோ! அறிவை யெங்கே கொண்டுபோய் விற்றாய்? என்னதான் சோபு தடவி பொன் நிறங்களுடனே உரைத்தாலும் அந்த நாய்க்கு ஊனமே ஒழிய அது வெள்ளையாகி விடுமா? அட பைத்தியகாரா. இதென்ன மதியீனம்!' என்று சொன்னார்கள். அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி, நாயகமே! இது என் கல்வியைப் பொறுத்த வேலையல்ல. ஆனால் தங்கள் சமுகத்திலிருந்து தான் இந்த அறிவைக் கற்றேன்' என்று மறுமொழி கொடுத்தார். அதுகேட்டு சுல்தான் கோபங்கொண்டு 'அடே அறிவில்லாத மூடனே! இவ்விதமான மதியில்லாத செயலை நான் என்ன செய்தேன்' என்று கேட்டார் உடனே அபூநவாஸ் சுல்தானை நோக்கி 'நாயகமே! என்ன சொல்கிறீர்கள்! தாங்கள் கேவலம் நிரம்பவும் கருப்பான ஒரு ஹபஷிப் பெண்ணை சண்பகப் புஷ்பத்திற் கொப்பான எங்கள் சிரோமணி சுபைதா என்கிற நாச்சியாரைப் பார்க்கிலும் அதிக மேலான

வளாகப் பாராட்டும்போது இந்தக் கருத்த நாயானது இப்பொன் முலாமுடைய சோபுகொண்டு நான் உரைத்து கழுவும்போது ஏன் வெள்ளை நாயாகாது?' என்று சொன்னார். உடனே அங்கு நின்ற ஜாபர் மந்திரி முதலிய வர்களெல்லாம் கெல்லென்று சிரித்தார்கள். சுல்தானும் 'ஒக்கச் சிரித்தால் வெட்கமில்லை' என்பதுபோல களக்கள வென்று சிரித்துகொண்டு போய்விட்டார்கள். சுல்தானுடன் அபூநவாஸ் திஜிலா நதியில் நடத்திய சாமர்த்தியமான ஸம்பாஷணையை சுபைதா நாயகி கேள்விபட்டபோது, அபூநவாஸுக்கு அநேக நன்கொடைகள் கொடுத்தனுப்பினார்கள்.

13-வது கிஸ்ஸா

ஒரு நாள் சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்களின் இளைய குமாரர் அகுமது இஸ்ஸுத்தீன் ரஷீது அவர்களுக்குக் கல்யாணஞ் செய்வதற்காக மாப்பிள்ளையை நவரத்தினங்களால் அலங்கரித்து, அலங்கரிக்கப்பட்ட ஒரு மத யானையின் மேல் அம்பாரி வைத்தேறி இரு பக்கத்திலும் இருபதினாயிரத்திற் கதிகமான தீவட்டிகளின் தீபப் பிரகாசத்துடனே சங்கீதப் பெண்கள் பாட, நடன ஸ்திரீகள் ஆட, வித்வான்கள் வாழ்த்த, சிற்றரசர்கள் ஆலாத்தியேந்த, இரண சூரர்கள் விருது வாத்திய தம்பூர் அடித்து கட்டியங் கூற, வானவேடிக்கை பாணஹஸ்திரங்கள் ஆகாயத்தை அலங்கிர்தம் பண்ண மகா தோரணங்களால் ஜோடித்து தேவேந்திரன் கொலுவைப்போல் கம்பீரம் பொருந்திய ஒரு பிரதான வீதி வழியாகப் பட்டணம் பிரவேசம் போகும்போது, அந்தப் பவனிக்கு நடுவே சுல்தானவர்

களின் பொன் விதானமும் போய்க்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் அபூநவாஸ் ஒரு கிழ கழுதையின் செவிகளில் தேங்காய்ச் சிரட்டைகளைக் கவர்பிளந்து கவ்வச் செய்து அதன் வாலில் ஒரு பந்தத்தைக் கட்டி அதில் சைத்தான் எண்ணெயைத் துவைத்துக் கொளுத்திவிட்டு அதன் கழுத்தில் நல்ல பலமான கயிற்றைக்கட்டித் தன் கையில் பிடித்துக்கொண்டு அந்த மாப்பிள்ளைப் பவனியின் கூட்டத்திலேவிட்டு ஓட்டிக்கொண்டு வந்தார். அந்தக் கழுதை தன் காது வலியும், வாலில் பிடித்த நெருப்பின் வேகமும் தாள இயலாமல் வாலை முருக்கிக்கொண்டு 'காள் காள்' என்று கத்திக்கொண்டு ஓட ஜனங்களெல்லோரும் நெருக்கடிபட்டு ஒருவர் மேல் ஒருவர் விழுந்து தள்ளாடினார்கள். இந்த அடாத செய்கையை சுல்தானவர்கள் கண்டு அபூநவாஸை நோக்கி 'அட பயித்தியக்காரா? இதென்ன கேவலமான வேலையைச் செய்துகொண்டு வந்தாயே! இது ஏன்!' என்று கேட்டதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி 'என் நாயகமே! இதோ என் கையில் பிடித்துக்கொண்டு வருகிறேனே இவர், சாதாரண கிழவனென்று எண்ணவேண்டாம் இவரிடம் கழுதை காம்போதியென்றொரு நூதன வாத்தியம் இருக்கின்றது. அது கேட்கக் கேட்க வெகு இனிப்பாக இருக்கும். தங்கள் பவனிக்கென்று வெகுதூர தேசங்களில் இருந்து வந்திருக்கின்ற சங்கீத வித்துவான்களின் தோடி, பைரவி, சாவேரி, ஸஹனி முதலிய ராகங்களுடன் இந்தக் கிழவனுடைய கழுதை காம்போதியும் ஒன்றாய்ச் சேர்ந்தால் மிக அழகாயிருக்குமென்று நான் வெகு பிரயாசையுடன் இவரை அழைத்துக்கொண்டு வந்தேன்' என்றார். அதை சுல்தான் கேட்டவுடனே கள களவென்று சிரித்தார்கள். வீதியெல்லாம் நிரம்பி நின்ற ஜனங்களும் சிரித்துவிட்டு அபூநவாஸை துரத்திவிட்டார்கள்.

14-வது கிஸ்ஸா

சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்களுக்கு மிகவும் விமரிசையான சௌந்தர்யமுடைய காலிஸா என்னும் ஒரு வெள்ளாட்டி இருந்தாள். அவள், அபூநவாஸ் சுபைதா நாயகியின் பக்கமாகச் சேர்ந்து பேசுகிறுரென்று ஒரு நாள் அபூநவாஸைப் பற்றி அலட்சியஞ்செய்து பேசினுள். அதை அபூநவாஸ் ஒற்றர்களின் மூலமாய்த் தெரிந்து கொண்டிருந்தார். இது இப்படி இருக்க, சுல்தான் அந்த காலிஸா உடைய அழகிய வடிவுக்காகவேண்டி அவள்பேரில் மிகவும் பிரியம் வைத்திருந்தார். அதனுலே சுல்தான் அவளுக்கு எவராலும் விலை மதிப்பிடமுடியாத மகா உயர்ந்த இரத்தினங்கள் அமைத்த ஓர் இரத்தின மாலை செய்து அதை அவள் அணிந்துகொள்ளும்படியாக நன் கொடை கொடுத்தார்கள். அந்த மாலையை அவள் அணிந்துகொண்டு அந்த பகுதாது பட்டணத்திலுள்ள தகுந்த கனவான்களின் கலியாண முதலிய விசேஷ மாளிகைகளுக் கெல்லாஞ் சென்று அதைப்போன்ற ஓர் இரத்தினச் சவடியும், அவளைப்போன்ற ஓர் அழகிய பெண்ணும் உலகத்திலேயே இல்லையென்கிற பிரக்யாதியான பெயர் பெற்றுக்கொண்டாள். அப்படி இருக்குங் காலத்தில் ஒரு நாள் அபூநவாஸ் காலிஸாவினுடைய மாளிகைக்குப் போய் அந்த மாளிகையின் எதிர் முகப்பு சுவரில் ஒரு சாமர்த்தியமான கவியைப்பாடி எழுதிவிட்டார். அந்தக் கவியின் அர்த்தமாவது :—

“ காலிஸாவென்னும் வெள்ளாட்டியின் கழுத்தில் அணிந்திருக்கின்ற மகா கீர்த்தி பொருந்திய இரத்ன மாலையானது மங்கிப்பழுதாகி விட்டதுபோல இந்த வாசலில் எனது அபூர்வமான கவியும் நிலைகுலைந்து போயிற்று ”

இவ்விதமான கவியை எழுதிவிட்டு அப்பால் என்ன நடக்கின்றது பார்ப்போம் என்று அந்த மாளிகைக்கு ஸமீபமாக உள்ள மறைவான ஓர் இடத்தில் ஒளிந்து கொண்டு நின்றார். அந்த நேரம் காலிஸா சுல்தானுடைய கொலுவுக்கு வரவேண்டிய சமயமாக இருந்ததாலே பலவித பட்டாடைகளை உடுத்திக்கொண்டு கதவைத் திறந்து வெளியில் வந்தாள். எதிரே இருக்கிற சுவரில் புதிதாக ஒரு கவி எழுதி யிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டு உடனே அதன் அருகிற்போய் வாசித்துப்பார்த்து, இது அபூநவாஸுடைய அக்கிரமமான வேலைதான் என்று திட்டப்படுத்திக்கொண்டு அங்கிருந்து மிகுந்த கோபத்துடனே சுல்தான் அவர்களின் சமுகத்திற்கு வந்து, 'இந்த க்ஷணமே நீங்கள் அபூநவாஸின் தலையை வெட்டும்படியாக கட்டளை செய்யாதிருந்தால் என் ஜீவனை உங்கள் காலடியிலேயேவிட்டு விடுவேன்' என்று நிரம்பவும் கடு கடுத்த முகத்துடன் சொன்னாள். சுல்தான் அவர்கள் காலிஸாவை நோக்கி, 'சும்மா ஆத்திரப்படாதே பொறு. என்ன கருமம் நடந்தது?' என்று கேட்டார்கள். அதற்கு காலிஸா என் மாளிகைச் சுவரில் பழிப்புக்கிடமான ஒரு வசை கவியை அபூநவாஸ் எழுதி வைத்திருக்கின்றான். அதில் என் பிரக்யாதிப் பெற்ற மாலை மங்கிப்பழுதாய் விட்டது என்று பொருள் படும்படி எழுதி யிருக்கின்றான். அப்படிப் பழுதாய்ப்போன மாலை எனக்கு வேண்டியதில்லை. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்' என்று மாலையை உடனே கழற்றி, சுல்தான் சமுகத்தில் எறிந்து போட்டாள். அதைப் பார்த்த உடனே சுல்தான் அடங்காத கோபங் கொண்டவர்களாகக் காலிஸாவை நோக்கி, 'நல்லது; நானும் வந்து பார்க்கிறேன். அவ்விதமான அர்த்தமுள்ளதா

யிருக்கும் பட்சத்தில் இந்தக்ஷணமே அவன் தலையை வெட்டும்படி உத்தரவு செய்கிறேன். வா' என்றழைத்துக் கொண்டு காலிஸாவின் மாளிகையை நோக்கி வந்தார்கள். இதற்கிடையில் அபூநவாஸ் காலிஸா சுல்தானிடம் வெகு விரைவாகப்போன நோக்கத்தைத் தெரிந்துகொண்டு உடனே ஓடிப்போய் அக்கவியிலுள்ள இரண்டு (ஜன்) எழுத்துக்களைச் சுரண்டி அழித்துவிட்டு, அதே இடத்தில் இரண்டு (ஹம்ஸா) எழுத்துக்களை எழுதிவிட்டார். உடனே அந்த இகழ் கவியானது கீழ்க்கண்டவாறு புகழ் கவியாகிவிட்டது.

"சிதேவியான காலிஸாவின் அழகிய கழுத்தில் அணிந்திருக்கும் புகழுக்குரிய இரத்ன மாலையானது ஒளிவிட்டுப் பிரகாசிப்பதுபோல இந்தப் புகழ்பெற்ற அரமனை வாசலில் எனது கவியும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது" என்பதாம்.

பிறகு சுல்தானவர்களும் காலிஸாவும் வந்து சுவர் அண்டையில் சேர்ந்தபோது சுல்தான் அந்தக் கவியைப் பன்முறை நன்றாகப் படித்துப்பார்த்தார்கள். அது காலிஸாவின் புகழால் அலங்கரிக்கப்பட்டிருப்பதைக் கண்டு காலிஸாவை நோக்கி 'என்ன பேதமை! மகா வித்துவானாகிய அபூநவாஸ் இந்தக் கவிதையில் உன்னைப் புகழ்ந்தல்லவா இருக்கின்றான்! உனக்கு அதை வாசித்து அறியக் கூடிய ஆற்றல் இல்லாவிட்டால், அபூநவாஸின் அருமையான தலையை வெட்டிவிட வேண்டுமோ?' என்று சொல்ல அதை காலிஸாகேட்டு, 'என் நாயகமே! இந்தக் கவிதையிலுள்ள இரண்டு ஐன்களை மாற்றிவிட்டான். அது அவனுடைய சாமர்த்தியமாக இருக்கும்' என்று சொன்னாள். அப்பால் சுல்தானவர்கள் சிரித்துக்கொண்டு அபூநவாஸின்பேரில் சந்தோஷமாகப்போய் விட்டார்கள்.

15-வது கிஸ்ஸா

ஒரு மனிதன் அபூநவாஸிடத்தில் வந்து சுதந்தரத்தைப்பற்றி ஒரு கேள்வி கேட்டான். அதாவது ஒரு வர்த்தகன் ஒருமகளையும், ஒருமகனையும், ஒரு தாயையும், ஒரு பெண்ஜாதியையும் ஹயாத்துடன் வைத்து விட்டு யாதொரு ஆஸ்தியுமில்லாமல் இறந்துபோனான். ஹக்குதாரிகள் எவ்விதமாகப் பங்கு பிரித்துக் கொள்கின்றது? என்று கேட்க, அதற்கு அபூநவாஸ் மகளுக்குப் பிதா இல்லாத மிடி, மகனுக்குத் தகப்பனில்லாத தனிமை, தாயானவளுக்கு மகனில்லாத வறுமை, மனைவிக்குப் புருஷனில்லாத எளிமை இவைகள்போக மிகுதியிருக்கின்ற சிறுமைகளை யெல்லாம் நீ யெடுத்துக்கொள்? என்று சொன்னார். உடனே அவன் சிரித்தவனாக நடந்தான்.

ஒருநாள் ஒரு கண்கெட்ட குஷ்டரோகி யொருவன் அபூநவாஸ் இடம் வந்து 'மஹா புத்திமானே! எனக்கு வெகுநாளாக இபுலீசைக் காணவேண்டி ஆசையாக இருக்கிறது. அவனைக் காண்பிக்கக்கூடுமா? என்று கேட்டான். அதற்கு அபூநவாஸ் 'ஆஹா! அதற்கென்ன வெகு சுலபமாகக் காட்டுகிறேன். அவனால் எனக்கு இன்றைக்கு நல்ல கனஅத்து இருக்கின்றது! ஒரு தீனறு அதாவது இரண்டரை ரூபாய் தருவீரா!' என்று கேட்டார். உடனே அந்த மனிதன் அந்த மஹா கெட்டவனாகிய இபுலீசுதான் எப்படி இருக்கிறான் என்று பார்க்கலாமே என்றெண்ணி மிகுந்த ஆசையுடன் ஜோபியில் கையைப்போட்டு இரண்டரை ரூபாய் எடுத்துக் கொடுத்தான். அபூநவாஸ் அதை வாங்கி தன் ஜோபியில் போட்டுக்கொண்டு அந்த மனிதனை ஒரு அம்பட்டன் கடைக்கு அழைத்துக்கொண்டுபோய் அங்

கிருந்த ஒரு பழய கண்ணாடியை எடுத்து அந்த மனிதன் கையில் கொடுத்து, 'இதை நன்றாகக் கூர்ந்து பார். அதில் ஒரு இழிவான முகமானது ஒரு கண் பொட்டையாக வெளியாகும். அவன்தான் இபுலீஸாக இருக்கும்' என்று சொன்னார். உடனே அவன் வெட்கித்து மௌனமாய்ப் போய் விட்டான்.

16-வது கிஸ்ஸா

ஒருநாள் நமது விகடகவி சங்கீதம் பாடும் பெண் வீட்டுக்குப் போயிருந்தார். அந்த வீட்டின் வாசலில் 'ஆதம், ஹவ்வா' என்று எழுதி அவைச்சூழ பொன் வர்ணமுள்ள நல்ல சித்திர வேலைகளெல்லாஞ் செய்திருந்தன. அதை அபூநவாஸ் கண்டவுடனே அந்தச் சங்கீதக்காரியைப் பார்த்து, 'ஏன் இப்படி ஆதம், ஹவ்வா என்றெழுதியிருக்கின்றது!' என்று கேட்டார். அதற்கவள் 'இந்தச் சிறப்பான இரண்டு திருநாமங்களையும் வீடுகளில் எழுதி வைப்பதால் இபுலீசாகிய ஷெய்தான் வந்து அணுகமாட்டான் என்று ஒரு மகாப்பெரியவர் எனக்குச் சொன்னதால் நான் இவ்விதம் செய்து அலங்கரித்து வைத்திருக்கின்றேன்' என்றாள். அதைக் கேட்டவுடனே, அபூநவாஸ் அந்த இராகக்காரியை நோக்கி 'அடி பைத்தியகாரி! உனக்கும் புத்தி கிடையாது; அந்தப் பெரியவருக்கும் புத்தி கிடையாது. ஆதமும் ஹவ்வாவும் சுவர்க்கலோகத்தில் அநேக வில்தான்களுடைய பாதுகாவலில் இருக்கும்போதே அவர்களைக் கெடுத்துக் கிழான நிலைமையில் ஆக்கிவிட்ட இபுலீசானவனுக்கு அவர்கள் பெயரை எழுதிவைத்திருக்கின்ற கேவலம் ஒரு சங்கீதக்காரியின் வீட்டில் வந்து நுழைகின்றது ஒரு பெரிய காரியமோ!' என்று சொன்னார். அவள் வெட்கப்பட்டு அபூநவாசுக்குப் பரிசு கொடுத்து அனுப்பினாள்.

17-வது கிஸ்ஸா

ஒருதினம் அபூநவாசும், அவருடன் உடுத்த துணி யில்லாமல் நாலுபுறத்திலும் கிழிந்த கந்தையை உடுத்திய நிரம்பவும் அஷ்டதரித்தவாளனுகிய ஒரு பக்கீரும் ஒரு ஜனுஸாவுக்குப் போய் இருந்தார்கள். அப்பால் அந்த சவத்தைக் கழுவிக்குளிப்பாட்டி கபன்தபன் முதலிய சர்வ சடங்குகளேயுஞ் செய்து தூக்கி ஸந்தூக்கில் வைத்துக் கொண்டு போகும் தருணத்தில் அந்த மையித்தான வருடைய மனேவி ஜனுஸாவைப் பார்த்து, ''என் எஜமானே! நாயகமே! உம்மை ஜனங்கள் ஒரு வீட்டுக்கல்லவோ கொண்டு போகின்ருர்கள். அந்த வீடானது எப்படிப் பட்டதென்ருல், அதில் வெளிச்சங்கொடுக்க ஒரு விளக்காவது, பசிக்குத் தின்பதற்கு கொஞ்சம் ஆகாரமாவது, கீழே விரிப்பதற்கு ஒரு விரிப்பாவது, காற்றுக்காக வீசிக் கொள்ள ஒரு விசிரியாவது, பயப்படாமல் இருக்க ஒரு துணையாவது கிடையாதே; அப்படிப்பட்ட வீட்டுக்கல்லவோ கொண்டு போகின்ருர்கள்.'' என்று ஒப்பாரி சொல்லி அழுதாள். அதை அபூநவாஸ் கேட்டவுடனே தன் அருகில் நிற்கின்ற இந்தப் பக்கீரைப் பார்த்து, ''அந்தப் பெண்பிள்ளை ஒப்பாரி சொல்லுவதைப் பார்த்தால் இந்த மையித்தை உம்முடைய வீட்டுக்குத்தான் கொண்டு போகிருர்கள் போலிருக்கிறது'' என்று சொன்னுர். அதை அந்த எளிய பகீரானவர் கேட்டு அவர் உள்ளுக்குள்ளே சிரித்துக் கொண்டு போய்விட்டார்.

18-வது கிஸ்ஸா

ஒருநாள் சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்கள் தங்கள் கையில் ஒரு மாணிக்கச் சவடியை வைத்து அழகு பார்த்துக் கொண்டிருக்கும்போது, அபூநவாஸ் அவர்கள் சமுகத்தில் வந்து "நானும் என் மனைவியும் இன்று ஒரு கலியாண வீட்டுக்குப் போகப்போகின்றோம். என் மனைவிக்கு ஒரு சவடி இரவல் தரவேண்டும்" என்றார். அதற்கவர்கள் "அபூநவாஸே உனக்கு இரவல் தந்தால் பிறகு அதை நீ திருப்பித் தருகிறதும், அதை நாம் வாங்குகிறதும் யோக்கியதையல்ல. என்றாலும், நீ இரண்டு நாளைக்கு முன்னதாக வந்தல்லவோ கேட்கவேண்டும். இப்பொழுது திடீரென்று வேண்டும் பட்சத்தில் எப்படிக் கொடுக்கமுடியும்?" என்றார்கள். அதற்கு அபூநவாஸ் 'தங்கள் கையிலிருக்கின்ற மாணிக்கச் சவடியைத் தாருங்கள்' என்றார். சுல்தான் இது உலகமெல்லாம் புகழ்பெற்ற ஒரு பெரிய நகை. இதற்கு இரத்தினங்கள் தேர்ந்தெடுத்ததற்குச் சொல்லொணாப் பாடு பட்டோம். மேலும் இது பொல்லாதவளாகிய சுபைதாவுக்கு உரியது. இதிலொரு இரத்தினம் தவறிவிட்டால் நூறு வருஷம் சென்றாலும் கிடைப்பதரிது. அவ்விதம் ஏதாகிலும் ஓர் இரத்தினம் தவறி நகை பழுதாய்விட்டாலும், அந்த சுபைதாவினுடைய கோபத்தையும், அவள் சொல்லையும் என்னால் தாங்கமுடியாதப்பா! வேறு எங்கேயாவது ஒரு சவடியைப் பார்த்து விலைபேசிவா, அதற்குறிய திரவியம் நான் தருகிறேன். வாங்கிக்கொள்" என்று அபூநவாஸுக்குச் சொல்லிவிட்டார்கள்.

சுல்தான் அவர்கள் சுபைதா நாயகிக்குப் பயந்து கூறிய மொழிகளைக் கேட்ட அபூநவாஸ் 'நல்லது இருக்கட்டும்;

சுல்தானுக்கு ஒரு தாம்பூலம் பிடிக்கிறேன்' என்று தன் மனதிலே சொல்லிக் கொண்டார். அந்தச் செய்தியை அப்படியே சில காலம்வரையிலும் வெளியிடாமல், ஒரு நாள் சுல்தான் அவர்கள் சிம்மாஸனத்தில் வீற்றிருக்கும் போது தனியே அபூநவாஸ்போய் ஸலாம் செய்து சுல்தான் மனது கனிந்து உழுகும்படியான ஒரு கவியைப் பாடினர். அந்தக் கவியின் இனிய சுவையை சுல்தானவர்கள் கண்டு, "கவிராயரே இச்சமயம் நீ என்ன சன்மானம் கேட்டா லும் தருகிறேன்" என்று சொன்னர்கள். அதைக் கேட்ட அபூநவாஸ் "மாட்சிமை தங்கிய ராஜாவே! நீங்கள் எனக்கு வேறொன்றும் தரவேண்டாம். என் மனதில் வெகு காலமாக ஓர் ஆசை யிருக்கின்றது. அதாவது 'இந்தப் பகுதாது பட்டணத்தில் யார் யார் தமது மனைவிக்குப் பயப்படுகின்றார்களோ, அவர்களெல்லாம் நமது அபூநவாஸுக்கு ஒவ்வொரு கழுதை வாங்கிக் கொடுத்து அந்தக் கழுதையின் கழுத்தில் தங்கள் தங்கள் பேரெழுதிய சீட்டுகளைக் கட்டித் தொங்கவிடவேண்டும். இதற்கு மாறுபட்டவர்கள் யாராயிருந்தாலும் தண்டிக்கப் படுவார்கள்' என்று ஒரு பத்திரமெழுதி அதில் தங்கள் முத்திரை வைத்து என்கையில் கொடுக்கவேண்டும்" என்று கேட்டார். சுல்தான் குலுங்கக் குலுங்கச் சிரித்து விட்டு அப்படியே ஒரு நிபந்தனை பத்திரமெழுதி அதில் தமது அதிகார முத்திரையையும் வைத்து அபூநவாஸ் கையில் கொடுத்தார்,

அபூநவாஸ் அதை வாங்கிக்கொண்டு அந்தப் பகுதாது பட்டணத்திலுள்ள வீதிகள் தோறும் ஒவ்வொரு நாளும் போய்ப் போய் பஜாரில் உலாவுகின்ற ஜனங்களை வலி வலிய உறவாடி மெதுவாகக் குடித்தனத்தின் பழக்கங்களைப்

பேசிக்கொண்டு திரிந்ததில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவனைக் கூட்டிக்கொண்டு ஜவளிக் கடைக்குப்போய் என் பெண்ஜாதிக்கு இந்தப் புடவை! உன் பெண்ஜாதிக்கு அந்தப் புடவை! என்று பேசிக் கொண்டதில் அவன் 'அந்தப் புடவையை என் பெண்ஜாதி யெப்போதும் அணிந்ததில்லை. இப்பொழுது இதைப் புதிதாகக்கொண்டு போனால் என்னை வீணே அவமானமாகப் பேசி நகைத்து அடிக்க வருவாள்.' என்று பயந்து பேசினான். உடனே அபூநவாஸ் அவனிடம் சுல்தான் தனக்கு எழுதிக் கொடுத்த அதிகாரப் பத்திரத்தை எடுத்துக் காண்பித்து ஒரு நிமிஷமாவது வீணாகாமல் ஒரு கழுதையை அவன் பேருடைய சீட்டுடன் வாங்கிவிட்டார்.

இன்னொருவனை அடுத்து 'இன்றிரவு நல்ல இந்திர ஸபா நாடகம் நடக்கின்றது. வா; போய்ப் பார்க்கலாம்' என்று இழுத்தார். அவன் 'எந்த வேலைக்கும் பகலாய் இருந்தால் வருகிறேன். இரவானபடியாலே இந்த வேலைக்கு நான் வரமுடியாது. என் வீட்டுக்காரி மகா கெட்டவள். ஒரு நாளாவது இரவில் என்னை யெங்கேயுந் தங்கவிட மாட்டாள். இன்றிரவு நான் உம்முடன் வந்து விட்டால், நாளைக்கு எனக்கு யாதொரு சந்தேகமுமின்றி பழைய முறமும் துடப்பக்கட்டை பூசையும் கிடைக்கும். ஆதலால் தயவு செய்து நீங்களே போய் வாருங்கள்' என்று சொன்னான். உடனே அவனிடத்திலும் அந்த அதிகாரப் பத்திரத்தைக் காண்பித்து, பெரிய மடிபிடிமல் யுத்தத்துடன் ஒரு கழுதையும் சீட்டும் பெற்றுக்கொண்டார்.

இவ்விதமாக சில நாட்களில் ஆயிரக் கணக்கான கழுதைகளை மந்தை மந்தைகளாகத் திரட்டிவிட்டார். ஒரு

நாள் அபூநவாஸ் அந்தப் பெருங் கூட்டமான கழுதைகளைத் திரட்டிக்கொண்டு சுல்தானுடைய அரமனை வழியாகப் போனார். சுல்தானவர்கள், தங்கள் மாளிகையின் மேன் மாடியில் இருந்து பார்த்தார்கள். வீதி யெல்லாம் எள்ளு போட இடமில்லாமல் எங்கே பார்த்தாலும் ஒரே கழுதை மயமாகவே இருப்பதைக் கண்டு ஆச்சரியமுற்றவர்களாக 'இதென்ன புதுமை' என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, கடைசியாக ஒரு கிழக் கழுதையை அபூநவாஸ் ஓட்டிக்கொண்டு வருவதைக் கண்டு அபூநவாஸைத் தங்களருகில் அழைத்து, "அபூநவாஸே நீ மிகக் கெட்டிக்காரன்! நான் விளையாட்டாக எழுதித் தந்த ஒரு சிறு துண்டு பத்திரத்தைக் கொண்டு இத்தனை ஆயிரம் கழுதைகளைச் சேகரித்துவிட்டாயே! இது நல்ல தந்திரமடா!" என்றார்கள். 'அப்பொழுது இதுதான் சுல்தானுக்குத் தாம்பூலம் பிடிக்கிற ஸமயம்' என்று அபூநவாஸ் "கேட்டீர்களா சுல்தானே! நான் வருகிற வழியில் அலங்காரமான ஒரு பெரிய மாடமிருக்கின்றது. அதன் உப்பரிகையின் மேலே தங்கள் ஆயுளிலுங் கண்டிராத ஒரு யெளவன ரூபலாவண்யமான வாலிபப் பெண் அன்னப் பக்ஷியைப் போல் நின்று உலாவுகிறாள். அவளை அத்தகைய அழகிய உருவத்துடன் படைத்தானே அந்த ஆண்டவனுக்கே எல்லாப் புகழும் கீர்த்தியுமுண்டாகு"மென்று மிகுந்த ஆர்வத்துடன் குரலை உயர்த்திச் சொன்னார். சுல்தான் இருந்த அந்த மேன்மாடமானது, சுபைதா நாயகியுடைய மாடமானதாலே வேறொரு ஸ்திரீயின் அழகைப் பற்றி அபூநவாஸ் சொல்லுவதை அவர்கள் கேட்டுவிடப் போகிறார்கள் என்று சுல்தான் பயந்துபோய் அபூநவாஸை நோக்கி "அடா அபூநவாஸே, அப்படியிருப்பினும் ஆபரணத்தைப்

பார்க்க இது தக்க சமயமில்லை. நாளைக்கு அதைக் கட்டாயம் வாங்கி நம்முடைய சுபைதாவுக்குக் கொடுத்து விடவேண்டும். நீ அதன் விலையை பற்றி மெதுவாய்ப் பேசு" என்று கண்ஜாடை காட்டினார்கள். உடனே அபூநவாஸ் "நான் எளியவனுக்கு ஒரு சட்டம் வலியவனுக்கு ஒரு சட்டம் செய்யமாட்டேன். ஆனதால் மனைவிமார்க்குப் பயந்த எளியவர்களெல்லாம் ஒவ்வொரு கழுதை தந்திருக்கின்றார்கள். நீங்கள் அந்தச் சட்டத்தை உண்டாக்கினவர்களாக இருப்பதாலே தாங்கள் இரண்டு கழுதைகள் தந்து அவைகளின் கழுத்தில் உங்கள் பெயரைச் சரியாக எழுதித் தொங்கவிட வேண்டியது" என்று சொன்னார். அதைக் கேட்டு சுல்தான் கள கள வென்று சிரித்த சிரிப்பில் அப்படியே விழுந்துவிட்டார்கள்.

19-வது கிஸ்ஸா

ஒருநாள் அபூநவாஸ் என்பவர் சுல்தான் ஹாரூன் ரஷீதவர்களைத் தரிசிக்க வேண்டுமென்று நாட்டங் கொண்டவராக அரமனை வாசலுக்குள் நுழையுஞ் சமயத்தில் அந்த வாசலில் புதிதான ஒருசேவகன் காவற்காரனாக இருந்தான். அவன் அபூநவாஸைப் பார்த்து "யார் போகிறது? நில்! போகப்படாது." என்று சொல்லித் தடுத்தான். அப்போது அபூநவாஸ் அவனை நோக்கி "நான் அபூநவாஸ் என்பவனல்லவா? சுல்தானவர்களுக்கு மிகவும் இஷ்டமுடைய சிநேகிதனல்லவா? இன்னும் நான் அவர்களின் இருதய கமலங்களுக்குப் பரமானந்தங்கொடுக்கின்ற அகட விகடக் கவிராயனல்லவா? என்னை இந்த வாசலில் எவர்களுந் தடைசெய்யமாட்டார்களே!" என்று சொன்னார்.

அதற்கந்த காவற்காரன் அபூநவாஸைப் பார்த்து " ஓ கவிராயரே! நான் உம்மைப் போகவிடவேண்டுமானால். நீர் என்னுடன் ஓர்வித, உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டியது. இல்லாவிடின் உம்மை நான் எவ்விதத்திலும் விடப்போகிறதே இல்லை" என்று முரட்டுத்தனமாகச் சொல்லிவிட்டான். அப்பால் அபூநவாஸ் அவனை நோக்கி 'அதென்ன நிபந்தனை' என்று கேட்டார். அதற்கந்த காவற்காறன் அபூநவாஸை நோக்கி, "புலவரே! நீர் சுல்தானிடம் போய் பாடுகிற விகடக்கவிகளாலே உமக்குக் கிடைக்கின்ற வெகுமானத்தில் எனக்கும் சமப்பாதி பங்கு தரவேண்டியது. இதற்கு நீர் சம்மதித்தால்தான் உம்மை நான் உள்ளே போகவிடுவேன்" என்று சொன்னான். அபூநவாஸ் அந்த நிபந்தனைக்கு உடன்பட்டுக்கொண்டு தன் மனதிலே நல்லது இவனுக்குச் சரியான புத்தி புகட்ட வேண்டுமென்று எண்ணிக்கொண்டு சுல்தானுடைய கொலு மண்டபத்துக்குள்ளே சென்று சுல்தானைத் தரிசித்தார். அப்பால் தனது வழக்கம்போல் சுல்தானுடைய ஸபையில் பற்பல விநோதமான வேடிக்கைகளையும் அகட விகடங்களையுஞ் செய்து, புகழ்மாலை, துறைக்கோவை, தாழிசை விருத்தம் சந்தமடல், கலம்பகம், காதல், வீது, சீட்டுக்கவிதை முதலிய நவரசமான பாடல்களையெல்லாஞ்சொல்லி சுல்தானையும் சபையோர்களையும் ஆனந்திக்கச் செய்தார்.

உடனே சுல்தான் அவர்பேரில் நிரம்பவும் பிரியத்துடன் " ஏ அபூநவாஸே! உனக்குவேண்டிய சன்மானங்களைக் கேள்.தருகிறேன் என்று கூறினார்கள். அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி " நாயகமே! எனக்கு வேறொன்றும் வேண்டாம். கசையினால் நானூறு அடி

தரவேண்டும்" என்று கூறினார்கள். உடனே அரசன் ஆச்சரியப்பட்டு அபூநவாஸைப்பார்த்து "ஏ அபூநவாஸே உனக்கென்னகேடு? இத்தகைய கொடிய பரிசை ஏன் விரும்புகிறாய்? நாநூறு அடி அடித்தால் ஒரு வேளை உன் ஜீவனுக்கும் ஆபத்துஉண்டாகக்கூடுமே; ஆதலால், அதைத் தவிர்த்து வேறெந்த பொருளையாவது கேள் தருகிறேன்" என்று சொன்னார்கள். அதற்கு அபூநவாஸ் சுல்தானை நோக்கி "இல்லை, இல்லை. எனக்கு அந்த நாநூறு அடிகளே வேண்டும்" என்றார். சுல்தான் "அபூநவாஸை நோக்கி இதுவரையிலும் நான் உன்னைப் புத்திசாலியான புலவன் என்று எண்ணியிருந்தேன். உண்மையில் நீ பெரிய பைத்தியக்காரனாக இருக்கின்றாய். ஆயினும் நீ அங்ஙனமே செய்யச்சொல்லி விரும்புவதாலே நானும் அப்படியே செய்விக்கின்றேன்" என்று சொல்லி உடனே அங்கு காத்துக்கொண்டு நிற்கின்ற ஆக்கினைக்காரனை அழைத்து 'இவனுக்கு நானூறு அடி கொடுத்தனுப்பு' என்று கட்டளை இட்டார்கள். ஆக்கினைக்காரன் அபூநவாஸுக்கு நிரம்பவும் பிரியமுடைய தோழனாக இருந்ததுமன்றி இந்தச் சபையில் அவர் ஒரு குற்றமுஞ் செய்யவில்லை என்பதையும் தெரிந்தவனானதாலே அவர்மேல் அடியானது படாதபடி பொய்யடியாக இருநூறு அடி அடித்த உடனே அபூநவாஸ் அடிப்பதை நிறுத்தச்சொல்லி சுல்தானை நோக்கி "அமீறுல்மு உமினீனே, இந்த நானூறு அடியில் இருநூறுஅடி வாசலில் இருக்கின்ற காவற்காரனுக்குரியது. ஏனெனில் நான் தங்களைத் தரிசிக்க வரும்போது அவன் வாயிலில் நின்றுகொண்டு என்னைப் போகக்கூடாதென்று தடுத்துப் பிறகு 'எனக்குத் தங்கள் சமுகத்தில் கிடைக்கும்படியான வெகுமானத்தில் தனக்கும் பேர்

பாதி பங்குதரவேண்டும்' என்று ஒரு நிபந்தனையைப் பேசி என்னிடம் தங்கள் பேரில் ஆணையிட்டு வாங்கிக் கொண்டு பிறகுதான் என்னைத் தேவரீர் சமுகத்தில் வர விட்டான். ஆதலால் என் பங்காளியான அவனுக்குரிய பாகத்தை அவனுக்கே கொடுத்துவிட வேண்டியது" என்று சொன்னார். அபூநவாஸ் கூறிய சங்கதியைக் கேட்டவுடனே சுல்தான் அவர்கள் கடுங்கோபத்துடனே அந்த வாசற் காப்போனை அழைத்து வரச்செய்து 'அடி' என்பதை மர்மமாக மனதில் வைத்துக்கொண்டு, அவனைப் பார்த்து "அபூநவாஸுடன் நீர் பாதிபங்குதரவேண்டும் என்று நிபந்தனை செய்துகொண்டது உண்மைதானா?"; என்று கேட்டார்கள். உடனே அந்தக் காவற்காரன் "ஆம் தங்கள் சபையில் அவருக்குக் கிடைக்கின்ற திரவிய வெகுமானத்தில் சரிபங்கு என்று பேசினேன். அதற்கு அவர் இசைந்து தங்கள் பேரிலும் சத்தியஞ்செய்து தந்திருக்கிறார். ஆனதால் எனக்குரிய பங்கை எனக்குக் கொடுங்கள். இல்லாவிட்டால் நான் அவரை விடமாட்டேன்" என்று காவற்காரன் சொன்னதை சுல்தான் அவர்கள் கேட்டு, "அவனுக்கு நம்முடைய சமுகத்தில் போதுமான வெகுமானமாக நானூறு அடி அடிப்பதற்கு உத்தரவு செய்திருக்கின்றேன். நீ சத்தியம் செய்து வாங்கின பிரயாசைக்காக வேண்டிகூட நூறு அதிகப்படித்தி விட்டேன். ஆக ஐந்நூறு அடிகளில் அவனுக்கு இருநூறு அடிபோக உனக்கு முந்நூறு அடிகொடுக்கத் தீர்மானித்திருக்கின்றேன். வாங்கிக்கொள்" என்று கட்டளையிட்டார். உடனே ஆக்கினைக்காரன் வந்து அந்த நிர்ப்பாக்கியனாகிய காவற்காரனைப் பிடித்துக்கொண்டு போய் வெகு விரைவாக முந்நூறு அடி அடித்தான். அந்தக் கசை அடியைப் பெற்ற

காவற்காரன், தாங்கமுடியாமல் உடனே மூர்ச்சையாகி விழுந்து விட்டான். அதைப்பார்த்துக்கொண்டு அருகில் நின்ற அபூநவாஸ் ஓடிப்போய் அவன் முகத்திலும், தேகத்திலும் தண்ணீரைத் தெளித்து அவனை எழுப்பி உட்காரவைத்து அவனை நோக்கி" கூட்டாளியே! எனக்கு முக்கால்பங்குதான் மெல்ல மெல்லக் கிடைத்தது உம்முடைய பாக்கியம் முழுப் பங்கு உரமாகக் கிடைத்தது. நீர் எந்தவிஷயத்திலும் நல்ல அதிஷ்டமானவராக இருக்கின்றீர். இதுஉமக்கு அதிகந்தானே! இனியும் என்னுடன் சரிபங்குக்கு நிபந்தனை செய்வதை மறந்து விடாதேயும்!" என்றுசொன்னார். அதைக் கேட்ட சுல்தானும், மற்றவர்களும் நகைத்துக் கொண்டிருந்தார்கள்.

20-வது கிஸ்ஸா

ஒரு சமயம் காரிருள் நாளாகிய அமாவாசையன்று அபூநவாஸும், அவர் மனைவியும் தமது மாளிகையின் மேல் கூடத்தில் நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அத்தருணம் அவர் வீட்டின் மேன்மாடத்தில் சில கள்ளர்கள் சேர்ந்து பேசுகிற குறிப்பை அறிந்து மெதுவாக எழுந்து தன் மனைவியை எழுப்பி "ஏ, பெண்ணே. ஊரெல்லாம் கள்ளர்களின் பயம் பெரிதாக இருக்கின்றது; நம் வீட்டிலோ சுல்தான் கொடுத்த ஆபரணங்களும், விலையுயர்ந்த பட்டாடைகளும் பொன் வெள்ளி திரவியங்களும் மிகுதியாக இருக்கின்றன. ஒரு வேளை நம்முடைய துரதிர்ஷ்டமாக அவைகளைத் திருடர்கள் கொள்ளையடித்துக் கொண்டு போய்விட்டால் எத்தனை ஆயிரம் வருஷங்கள் சென்றாலும் அவ்வளவு திரவியம் நம்மால் இனிமேல்

சம்பாதிக்கமுடியாது” என்று கள்ளர்களுக் கெல்லாம் நன்கு கேட்கும்படியாக உரத்த குரலில் சொல்லிவிட்டு, மடிபடியும் பெருங் குரலில் அவளை நோக்கி “ஏ பெண்ணே! அந்த ஆடையாபரணங்கள், தங்கக் கட்டிகள், முத்து இரத்தினங்கள், வஸ்திர பூஷணங்கள் ஆகிய யாவற்றையும் எடுத்து நமது இருப்புப் பெட்டியில் அடைத்து, அதைக் கயிறுகொண்டு வரைந்துகட்டி எடுத்துக் கொண்டுபோய் நமது புறக்கடைக்கும், கீரைத்தோட்டத்திற்கும் இடையில் இருக்கின்ற கிணற்றில் போட்டுவிட்டு வந்துவிடு. அப்பால் நமக்குத் தேவையானபோது ஒரு மணி நேரம் வரையிலும் தண்ணீர் இறைத்தால் கிணறு வற்றிவிடும். பிறகு இறங்கி எடுத்துக் கொள்ளலாம். விரைவில் இங்ஙனம் செய்வாயாக” எனக் கட்டளை இட்டார். பின்பு தானே சில பெட்டி எப்பதுபோலும், திறப்பதுபோலவும் தடபுட என்று சந்தடி செய்தார். சிந்நேரங்கழித்து ஒரு பெரிய கல்லை எடுத்துக் கொண்டுபோய் கிணற்றில் போட்டு வந்து விட்டார்.

அபூநவாஸ் தன் பெண்ஜாதியுடன் பேசிய மர்மங்களையும், அதற்கேற்ற வண்ணம் கிணற்றில்போட்ட சப்தத்தையும், கள்ளர்கள் உற்றுக்கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனவே, கள்ளர் தலைவன் மெதுவாக “இன்று நாம் இவ்வீட்டிற்கு வருகிற வழியில் நரியின் முகத்தில் விழித்தோம் போலும், மிகுதியான திரவியங்கள் யாதொரு பிரையாசையுமின்றி அகப்பட்டுக் கொண்டன. அவசரப் படாமல் மௌனமாய் வாருங்கள் இரண்டு இறைப்பில் அந்தக் கிணற்றுத் தண்ணீரை இறைத்துவிட்டு அந்த திரவிய பெட்டியைத் தூக்கிக் கொண்டுபோய் பங்கு போட்டுக்கொள்ளலாம்.” என்று மகிழ்ச்சியுடன் கூறினன்.

கள்ளர்கள் விரைவில் ஏணியை வைத்து மேன்மாடியிலிருந்து கீழே இறங்கி அந்தக் கிணற்றண்டை போய் அங்கிருந்த ஏற்றத்தைப் பிடித்து மாறி மாறி பெரும் பிரயாசையுடன் அன்றிரவு முழுவதும் இறைத்து இறைத்து வேர்த்தும்களைத்தும்விழும்படியாகக் கஷ்டப்பட்டும் அந்தக் கிணறு மிகுந்த ஆழமும், வற்ருத ஊற்றுமுள்ளதானபடியாலே அதிலிருந்த தண்ணீர் குறையவேயில்லை. பொழுது புலர்கிற சமயத்தில் அபூநவாஸ் மெதுவாக எழுந்து கிணற்றண்டை போய் அங்கு தண்ணீர் இறைத்து ஆயாசப்பட்டுக் களைத்துப்போய் நிற்கின்ற கள்ளர்களை நோக்கி, "நல்ல வேலை செய்தீர்கள். என் ஆஸ்திகளெல்லாம் இந்தக் கிணற்றில்தான் இருக்கின்றன. இன்னொரு சமயம் வந்து தண்ணீரிறைத்து அவைகளை யெடுத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது நீங்கள் காய்ந்து வாடி நிறகின்ற பயிர்களுக்கெல்லாம் நீர்ப் பாய்ச்சியதற்காக வேண்டி உங்கள் எல்லாருககும் நான் வந்தனமளிக்கின்றேன்" என்று புன்னகையுடன் கூறினர். உடனே அந்தக் கள்ளர்களெல்லாம் தங்கள் காரியம் நிறைவேருதற்காக வருத்தத்துடனும் அபூநவாஸின் சாமர்த்தியப் பேச்சுக்காக நகைப்புடனும் ஓடிப்போய்விட்டார்கள்,

---

21-வது கிஸ்ஸா

இதுநிற்க, ஒருநாள் சுல்தான் ஹாரூன் ரஷீதவர்கள் தமது பஞ்ச கல்யாணி குதிரையின்மேல் அமர்ந்து பகுதாது பட்டணத்தின் கடைத்தெருவின் வழியாகப் போகும் போது, எதிரே வருகிற அபூநவாஸின் கையில் கள் பாத்திரம் இருப்பதைக் கண்டு "ஓ, அபூநவாஸே! உமது

கையில் இருப்பதென்ன?" என்று கேட்டார் அப்போது அபூநவாஸ் தமது கையிலிருந்த கள்பாத்திரத்தை மற்றொரு கையால் முதுகுப்புறமாக மறைத்து வைத்துக் கொண்டு கையை விரித்துக்காட்டி "என் நாயகமே என் கையில் என்ன இருக்கிறது? ஒன்று மில்லையே" என்று சொன்னார்.

பின்பு சுல்தானவர்கள் "நல்லது அபூநவாஸே மற்றொரு கையைக்காட்டும்" என்றார்கள். அபூநவாஸ் அந்தக் கையிலிருந்த கட்கலயத்தை மற்றகையால் எடுத்துப் பின்புறமாக ஒளித்து வைத்துக்கொண்டு அந்தக் கையையும் விரித்துக் காட்டினார்.

சுல்தானவர்கள் அவருடைய தந்திரவித்தையைப் பார்த்து உள்ளுக்குள்ளே சிரித்தவர்களாக, "நல்லது ஒரே நேரத்தில் இரண்டு கைகளையும் காட்டும்" என்றார்கள். அதற்கு அபூநவாஸ் அங்கிருந்த ஒருகடையின் மதிளின் புறமாகப் பின்னுக்குப் போய் அக்கலயத்தை மதிளின் புறமாக வைத்துச் சாய்ந்து கொண்டு இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினார்.

அதுகண்டு சுல்தானவர்கள் "உமது இரண்டு கைகளையும் நீட்டினவராக என் சமுகம் வாரும்" என்று சொல்ல விகடக்களஞ்சியராகிய அபூநவாஸ் சுல்தானவர்களைப் பார்த்து "மஹாராஜாவே, உடைந்தல்லவா போய் விடும்" என்று சொன்னார். உடனே சுல்தானவர்கள் குலுங்கச் சிரித்துக்கொண்டு அபூநவாஸை விட்டு விட்டுப் போய் விட்டார்கள்.

———

22-வது கிஸ்ஸா

பகுதாது பட்டணத்தில் அபூநவாஸுக்கு அறிமுகமான ஒரு மனிதன் இருந்தான். அவனோ பெரிய உலோபி. ஒரு நாள் அவன் ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டு அபூநவாஸ் அவனைப்பார்க்கப் போயிருக்கும்போது அவன் அருகே பெரிய பெரிய ஹக்கீம்களும் வைத்தியர்களும் வந்து குழுமிக்கொண்டு பலவிதமான மருந்துகளைப். பிரயோகிக்க வேண்டுமென்று பேசிக்கொண்டிருந்தார்கள்.

அந்தச் சமயத்தில் அதிலொரு வைத்தியன் "இந்த மனிதனுக்கு வியர்வை வரும்படியான மருந்து கொடுக்கிறதாக இருந்தால் உடனே இந்த ஜுரமானது நீங்கி நோயாளி சொஸ்தமடைவான்" என்று சொன்னான். அங்கு ஒரு மூலையில்நின்று கேட்டுக்கொண்டிருந்த, மகா விகடராகிய அபூநவாஸ் எழுந்து நின்றுகொண்டு "இதோ! அதற்கு சுலபமான மருந்து சொல்லுகிறேன்." 'என்றார். அதை அந்த வைத்தியன் கேட்டு, 'அதென்ன மருந்து சீக்கிரம் சொல்லும்' என்று கேட்க, அதற்கு அபூநவாஸ் "வேறொன்று மல்ல. நீர் இப்போது அவனிடம் போய் இங்கு வந்திருக்கக்கூடிய ஜனங்களுக்கெல்லாம் அவன் செலவில் சிற்றுண்டி கொடுக்கவேண்டும்' என்று சொல்லும். அதைக் கேட்ட உடனே அவன் மனம் பதறிப்போய் விடும். அப்போது அவன் சரீரம் வியர்க்கும்" என்று வேடிக்கையாகப் பேசினார். அதைக்கேட்ட ஜனங்களெல்லோரும் நோயாளியினுடைய உலோபித்தனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு கொல்லென்று சிரித்தார்கள்.

23-வது கிஸ்ஸா

அபூநவாஸ் பூரணுதி லேகியத்தைத் தின்று வெறிதலைக் கேறி தன்னை மறந்து கிடக்கையில், சேவகர்கள் அவரைப் பிடித்துக்கொண்டு சுல்தானவர்களின் சமுகத்தில் கொண்டு போய் விட்டார்கள். சுல்தானவர்கள் அபூநவாஸைக் கண்ட உடனே நகைத்து அவரை உச்சந் தலையில் நன்ருகக் குட்டும் படியாய் அங்கிருந்தவர்களுக்குக் கட்டளை யிட்டார். 'அந்தப் பணிவிடையை நான் செய்கிறேன்' என்று ஒருவன் முன்வந்தான். அவன் குட்டையாயிருந்தான். அபூநவாஸே! மிகுந்த நெட்டையாக இருந்தார். ஆதலாலே நிற்கின்ற அபூநவாசை அவன் குட்டுதற்கு இயலாமல் அபூநவாஸை சற்று குனிந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டான். அதற்கு அபூநவாஸ் அவனைப் பார்த்து "அடா அதிகப் பிரசங்கியே; என்னை நீ குனியச் சொல்வது, எனக்கு இன்பத்தை ஊட்டவோ; ஆண்டவன் பேரில் சத்தியமாக மூவாயிரத்து முந்நூற்று முப்பத்திமூன்று முழம் உயரமுடையவராகிய ஊஜிப்பனு அனுவைக்காட்டிலும் இன்னும் உயர முடையவனுக ஆகவேண்டுமென்ருலும் ஆகுவேனே யன்றி, உன்னிடம் குட்டு வாங்கவேண்டி குனியவேண்டுமா? நான் போகின்றேன்" என்ருர். இதற்குச் சுல்தானவர்கள் சிரித்துக்கொண்டு அபூநவாஸை விட்டு விடும்படியாய் உத்தரவளித்தார்கள். அங்ஙனமே அவரை விட்டு விட்டார்கள்.

24-வது கிஸ்ஸா

ஒரு சமயம் அபூநவாஸ் ஹஜ்ஜிக்குப் போக வேண்டுமென்று விருப்பங்கொண்டு ஆலம் ஹாரூன் ரஷீதவர்களின் தர்பாரில்போய் அவர்களைக் கண்டு "முஉமீன்களுக்கெல்லாம் அரசரே; நான் முஸ்லிமானவன் என்பது தங்களுக்குத் தெரியுமல்லவா" என்று கேட்டார். சுல்தான் "ஆம், ஆம்; எனக்கு நன்ருய்த் தெரியும். நீ ஏன் இவ்விதம் வந்து கேட்டாய்" என்று மிக ஆச்சரியத்துடன் வினவினர்.

அதற்கு அபூநவாஸ் சுல்தானவர்களின் சமுகத்தில் கை கட்டி வாய் பொத்தி பெரிய மரியாதையுடன் நின்றுகொண்டு "நாயகமே; நான் ஹஜ்ஜியாத்திரை செய்து வர வேண்டும்" என்று சொன்னர். அதற்கு சுல்தானவர்கள் "அபூநவாஸைப் பார்த்து அப்படி உனக்கு ஹஜ்ஜியாத்திரை செய்து வரவேண்டுமானல் போவதற்கு நல்லவழிகளைத் தயார் செய்திருக்கின்றோம். அதன் மார்க்கமாகப் போய்வரலாமே" என்ருர். அதற்கு அபூநவாஸ் "அரசர் பெருமானே; நல்ல வழியிருப்பதற்குத் தடையில்லை. வழிச் செலவுக்குப் பணந்தான் இல்லை." என்ருர் அதற்கு சுல்தான் "வழிச்செலவுக்குப் பணமில்லையே யானல் உனக்கு ஹஜ்ஜிக்குப் போகவேண்டிய காரியமில்லையே" என்ருர்கள். அபூநவாஸ் அதற்கு மறுமொழியாக "மகாராஜரே, நான் தங்களிடம் வழிச்செலவிற்காகப் பணம் பெற்றுக்கொள்ள வந்தேனேயன்றி, உங்களிடம் மார்க்கச்சட்டங்களைக் கேட்க வந்தவனல்ல." என்ருர். சுல்தானவர்கள் அபூநவாஸுடைய சாமர்த்தியமான வார்த்தையினல் மனசந்தோஷங்கொண்டு, உடனே அவர்க்கு வேண்டிய திரவியத்தைக் கொடுத்தனுப்பினர்கள்.

25-வது கிஸ்ஸா

ஒருநாள் சுல்தான் ஹாரூன் ரஷீதவர்களிடத்தில் அபூநவாஸ் போய் ராஜசிகாமணியே நான் ஒரு சொப்பனங் கண்டேன். அதை ஓர் அற்புதக் கவியாகப் பாடுகிறேன் என்று ஒருகவி பாடினர். அதன் பொருளாவது :—

உலகத்தில் உள்ள கிரீடம் அணிந்த ராஜாக்களுக்கெல்லாம் ஒவ்வொரு வித்வான்களும் உண்டு என்றாலும் தங்களுக்கு நானே ஒரு சண்பக மலர்போல் வந்துவாய்த்து விட்டேன். எனக்குத் தாங்கள் ஒரு கற்பக தருவைப் போல் வந்து வாய்த்திருக்கின்றீர்கள். நான் இன்று கண்ட சொப்பனமோ என்னவெனின் தங்கள் திருக்கரங்களினாலே பசுமையான மரகத நிறம்போன்ற வஸ்திரத்தை நான் வாங்கிக் கட்டிக்கொண்டதுபோலும், என்னை நெடு நாளாய் வருத்தப் படுத்திக் கொண்டு வந்த கடன் என்ற பாவி இன்றோடு தொலைந்தது போலும் கண்டேன்.

இன்னும் சுல்தானே தாங்கள் மிருதுவான அநேக வஸ்திரங்களைக் கொண்டு வந்து என்பக்கத்தில் வைக்கவும் என் கடனைத் தீர்க்கவும், சண்பக மலரைப்போன்ற மினுமினுப்பாயுள்ள தீபாஜாப் பட்டுகளாலும், பசுமையான ஜாதிப் போர்வைகளாலும் தங்கள் அபூநவாஸ் என்னும் பஞ்ச கல்யாணியை ஜோடிக்கவும் கனவு கண்டேன் என்று கவியை முடித்துவிட்டு அபூநவாஸ் சுல்தானவர்களைப் பார்த்து "உமீன்களுக்கு நாயகமே! தேவரீர் என் சரீரம் தங்களுங்கு உரிமையானது; என் சொப்பனத்தை மெய்யாக்கி வையுங்கள்" என்றார். சுல்தானவர்கள் அபூநவாஸினுடைய 'நயமான வார்த்தையைக் கேட்டுச் சிரித்துவிட்டு, நல்லது உன் சொப்பனத்தை மெய்யாக்கி விடுகிறேன்'

என்று சொல்லி, அபூநவாஸின் கனவில் கண்ட எல்லா வஸ்துக்களையும் கொடுக்கும்படிக் கட்டளையிட்டு அபூநவாஸைப் பார்த்து, "இனிமேல் இப்பேர்ப்பட்ட கனவு கண்டேனென்று சொல்லிக்கொண்டு வராதே. அப்படி வருவாயாகில் அதை நான் பொய்க்கனவாக ஆக்கிவிடுவேன்" என்றார்கள்.

அப்பால் அபூநவாஸ் சுல்தானவர்களால் கிடைக்கப்பட்ட வஸ்திரபூஷணாதிகள் முதலியவை பெற்றுக்கொண்டு பட்டணமெல்லாம் மிக உல்லாசமாய்த் திரிந்து முந்திரிகை ரசத்தை வேண்டியமட்டும் குடித்து அடங்காத வெறிகொண்டு கால் தடமாறி நாவு குளறி இரவு நேரத்தில் ஆடி அல்லாடிப் போகும்போது இரகசிய காவற்காரர்கள் அவரைப் பிடித்து 'நீயார்? பெயரென்ன? உன் மார்க்கமென்ன?' என்று கேட்க, அதற்கு அபூநவாஸ் 'நான் பனீ அப்பாஸ் கோத்திரத்தைச் சார்ந்தவன்; என்பெயர் அபூநவாஸ்; நான் களிமண்ணால் கடுதாசிக்கு முத்திரை வைக்கப்பட்டவன். இந்த சமயத்தில் நான் செம்மையாய் நாலு (கஹர்பார்) அதாவது 24-கிராம் குடித்து விட்டேன். என் சிரம் சுழல்கின்றது. என்றாலும், என் வார்த்தையில் குற்றமிருக்கின்றதா?" என்று உரைக்கவே அந்தக் காவற்காரர்கள் அவரைப் பிடித்து சுல்தான் சனமானஞ் செய்த பச்சை சால்வையைக் கிழித்துப் பறபறவென்று இழுத்துத் தள்ளிக்கொண்டுபோய் சுல்தான் முன்னிலையில் நிறுத்தினார்கள். சுல்தானவர்கள் அவரைக் கோழியடைக்குங்குதாம்பில் கொண்டுபோய் அடைக்கும்படியாய்க் கட்டளை யிட்டார்கள் அப்படியே அவர்களும் கொண்டுபோய் அவரை அடைத்தார்கள். அபூநவாஸுக்கு மயக்கந் தெளிந்தபின் தமது பணிவிடைக்காரர்களாகிய வெள்ளாட்டிகளின் பேர்களைச் சொல்லிக் கூப்பிட்டார். ஒன்றும் பதில் இல்லை. கோழி

கள் கொக்கரிக்கின்றதும் சேவல்கள் கூவுகின்றதுமே அவர் காதுகளில் கேட்டன. மறுபடியும் அபூநவாஸ் தமது பணிவிடைக்காரர்களைக் கூப்பிடும் சப்தத்தை அங்குச் சற்றருகே உள்ள சிறைச் சாலையின் அதிபதியானவன் கேட்டு 'அடா! அபூநவாஸே உன் காரியமென்ன?' என்று கேட்க, அதற்கு அபூநவாஸ் 'நீரார்? நான் எங்கே இருக்கிறேன்? இந்த இடமானது என்ன இடம்'? என்று கடாவினர். அதற்கவன் 'நீ சிறையிலிருக்கிறாய்; இந்த இடமானது சிறைக்கூடம். நான் இந்த இடத்திற்கு அதிகாரி' என்று சொன்னான். அபூநவாஸ் அவனை நோக்கி 'என்னைச் சிறையில் அடைத்தது யார்?' என்றார். அதற்கு அவன் 'சுல்தான்' என்றான். அப்பால் அபூநவாஸ் அவனை நோக்கி 'அழகிய போர்வையைக் கிழித்த தார்?' என்று கேட்டார். அதற்கவன் இரகசிய சேவகர்கள் கிழித்தார்கள்' என்று பதிலளித்தான்.

உடனே அபூநவாஸ் அவன் மூலமாய் பேனா மூதலியவை பெற்று அரபு பாஷையில் சில அருமையான கவிகளை வரையலாயினர்.

அவைகளின் பொருளாவன :

"அமீருல்மு உமினீனே, என் சரீரம் தங்களுக்கு குர்பானக இருக்கும். என்ன குற்றத்திற்காக என்னைச் சிறையிலடைத்து வஸ்திரங்களையும் கிழிக்கச் செய்தீர்கள்? கலப்பில்லாத தெளிவான கள்ளைக் குடித்தேனென்றா? அந்தக் கள்ளானது விளக்கொளிபோல தெளிவும் பிரகாசமும் உடையது. அது அல்லாவின் நெருப்பைக்கொண்டு காய்ச்சப்பட்டது. இன்னும் நல்ல கனிந்த பானையில் நிரப்பப்பட்டிருந்தது. அதைக் கண்ட மாத்திரத்தில்

மனதிலே அடங்கா மகிழ்ச்சி பொங்கும். இன்னும் அதைப் பளிங்கு பாத்திரத்தில் ஊற்றிய உடனே, அதைக்கண்ட நபுசுகள் இச்சை யென்னும் அலைமோதி யடிக்கும். அப்படிப்பட்ட குடியை நான் குடித்ததற்காகவா என்னைச் சிறைச் சாலையில் அடைத்தீர்கள்.? அப்படி நான் ஒரு குற்றமுஞ் செய்யவில்லையே, யாதொரு குற்றமும் நான் செய்யாதிருக்கும்போதா என்னைச் சிறை படுத்தினீர்கள், அநியாயமான தீயகாரியங்களை எப்போதும் செய்பவர்களுக்கு விதிக்கும்படியான தண்டனையை எனக்கு விதித்தீர்கள். ஆனல் அத்தகைய பாவிகளோடு சேர்த்து என்னை அடைத்தாலும் நான் வியசனமற்று இருந்திருப்பேன். அப்படியுஞ் செய்யாமல் என்னை இந்தக் கோழிகளுடன் போட்டு அடைத்தீர்கள். ஆனல், கடலால் சூழப்பட்ட உலகத்தை நீதி தவறுமல் நடத்திவருகின்ற தேவரீருடைய நீதியான தண்டனைக்கு நான் தலைசாய்ப்பதை விட்டு நான் மீறமாட்டேன் என்றாலும், நான் தங்கள் காருண்ய கடாட்சத்தை விட்டும் நீங்கமாட்டேன்" என்று இவ்விதம் எழுதி முடித்து கலீபத்துல் இஸ்லாம் சுல்தான் ஹாரூன் ரஷீது அவர்களின் சமூகத்திற்கு அனுப்பி வைத்தார். சுல்தானவர்கள் அதை உடைத்துப் பார்த்த உடனே அபூநவாஸை அழைத்து வரும்படியாகக் கட்டளை யிட்டார்கள். உடனே அபூநவாஸ் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். சுல்தானவர்கள் அவரைப் பார்த்து 'அபூநவாஸே நீ, எங்கே யிருந்தாய்?' என்று கேட்க, அதற்கு அபூநவாஸ் 'நான் கோழிகளுடனே அடைபட்டிருந்தேன்' என்று சொன்னர். அதற்கு சுல்தானவர்கள், 'நீ என்ன செய்து கொண்டிருந்தாய்' என்று கேட்க, 'நானும் கா, கீ, என்று கொக்கரித்துக் கொண்டிருந்தேன்' என்று மறுமொழி தந்தார்.

அதற்கு சுல்தானவர்கள் விடாநகைப்புக் கொண்டு சில வெகுமானங்களைக் கொடுத்தனுப்பினார்கள். அவைகளைப் பெற்றுக் கொண்டு செல்லும்போது, ராஜதர்பாரில் உள்ள ஆயிரக்கணக்கான உலமாக்களில் ரபீக்கென்னும் நாமமுடைய ஓர் ஆலிமானவர் சுல்தானவர்களை நோக்கி "நாயகமே அபூநவாஸ தங்களுக்கெழுதின கடிதத்தில் 'அல்லாவுடைய நெருப்பில் காய்ச்சினது' என்றிருப்பதாலே அபூநவாஸ் குடித்தது சாராயம்போல விளங்குகின்றது" என்று சொன்னார். உடனே சுல்தான் அபூநவாஸைக் கூப்பிட்டு 'அடா அபூநவாஷே நீ குடித்தது சாராயமா' என்று கேட்டார்கள். அதற்கு அபூநவாஸ் 'நாயகமே; இல்லை' என்றார். அதற்கு சுல்தான் 'அல்லாவுடைய நெருப்பில் காய்ச்சப்பட்டதென்று சொல்லி இருக்கின்றாயே? அந்த நெருப்பு சூரியன்தானே. அந்தச் சூரியனால் காய்ச்சப்படுகிறது சாராயந்தானே' என்று சொல்ல" அதற்கு அபூநவாஸ், அல்லாவின் ஆணையாக நான் சூரியனை நாடவில்லை. குர்ஆனில் (வைலின்லிகுல்லி) என்ற சூத்திரத்தில் (நாறுள்ளாகி மனங்களைத் தாவிக் கருக்கும் என்கிற அல்லாஹுதத ஆலாவின் நெருப்பு என்ற சொல்லை நாடினேன். அந்த நெருப்புத்தான் இதோ இருக்கிற ரபீக்கென்கிற ஆலிமுடைய மனதில் தாவி பொறாமையை விளைவித்தது" என்று சொன்னார் அதற்கு சுல்தானவர்கள் களகளவென்று சிரித்துக்கொண்டு ரபீக் வ்ன்பவரை நோக்கி 'உமக்கு அபூநவாஸ் கொடுத்த சூடுபோதுமானது. இனிமேல் அபூநவாஸுடைய காரியத்தில் குறுக்கிடாதிரும்' என்று சொல்லி அவரைப் பரிகசித்தார்கள்.

26-வது கிஸ்ஸா

ஒருநாள் அபூநவாஸ் அளவுக்கு மிஞ்சி குடித்து வெறிக்கொண்டு கடைத்தெருவில் தட்டுத்தடுமாறிக் கொண்டே வந்து விழுந்துவிட்டார். அவர் விழுந்து கிடப்பதைக் கண்ட சிறு குழந்தைகளெல்லாம் கல்லால் அடிக்கவும், முகத்தில் தண்ணீரைக் கொண்டுவந்து ஊற்றவும், கை கொட்டிச் சிரிக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். அதன் பிறகு அபூநவாஸ் மயக்கந்தெளிந்து எழுந்து மெதுவாக ஆடி ஆடிக்கொண்டு வந்து தமது வீட்டின் வாசற்படியை ஸமீபித்தபோது, வீட்டில் உள்ளவர்களும் அண்டை வீட்டார்களும் அவரைப் பழித்துக் குறைகூறவே, அதற்கவர் நான் அல்லாவிடம் கொண்ட பக்தியினால் இந்தத் தன்மையினனாகி எல்லாரும் பழிக்கவும் அதனால் என் பாவமும் என் ஆணவமும் பெருமையும் நீங்கவும் எவ்வளவோ நாளாகப் பிரார்த்தனை செய்திருந்தேன். அப்படி நான் வேண்டிக் கொண்டதற்கு இன்றுதான் எல்லா வல்ல அல்லா என்னைப் பார்த்திரனைக் கொண்டான். ஆதலால் அவனுக்கே எல்லாப்புகழும் இகழும் என்றார்.

27-வது கிஸ்ஸா

ஒரு நாள் அபூநவாஸ் முட்டுப்பாடுடைய சமயத்தில் சுல்தான் ஹாரூன் ரஷீதவர்களின் சமுகம் போய் மிகவும் சலிப்புடன் முகம் வாடி நின்றார். அவரை சுல்தானவர் கண்டவுடனே மனமிரங்கி, 'அபூநவாஸே நீ ஏன் இப்படி வாட்டமாய் நிற்கிறாய்?' என்று கேட்டார்கள். அதற்கு அபூநவாஸ் 'நாயகமே, என் உயிருக் குயிராகிய மனைவியை இழந்து விட்டேன். மையத்துச் செலவுக்காக

ஒரு காசு மில்லாமல் இருக்கின்றேன்.' என்று சொன்னர். உடனே சுல்தான் அவர்கள் மனமிரங்கி அவரைத் தழுவிக் கொடுத்து அவருக்குப் பல ஆறுதல் மொழிகளைச்சொல்லித் தேற்றிய பிறகு மையத்தைச் சீக்கிரம் எடுக்கும்படியாய் ஒரு பெரிய தொகையைக்கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

பின்பு, அபூநவாஸ் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் தமது மனைவியைக் கூப்பிட்டு சுல்தானவர்களின் மனைவியாகிய சுபைதா நாயகி இடம் போய் "ஐயோ ஐயோ என்று அழுது 'என் புருஷன் இறந்து போனர். மையத்து எடுக்கப் பணந்தாருங்கள்' என்று சொல்லிப் பணம் பெற்றுவா" என்று சொன்னர். அந்த மாதும் அவ்விதமே மஹாராணியார் இருக்கும் அரண்மனைக்குப்போய் அழுது "ஹா, என் தலைவிதியே, என் அன்பிற் சிறந்த கணவனை இழந்து விட்டேனே, இனி எனக்கு உதவியாரிருக்கிறார்கள்" என்று பலவிதமாகப் புலம்பிச் சத்தமிட்டுத் தரையில் சாய்ந்தாள். அவள் கல்லும் உருகும்படி புலம்புவதைக் கண்ட சுபைதா நாயகியவர்கள் மனமிளகி கண்ணீர் ததும்ப தாதிப்பெண்களை யழைத்து அபூநவாஸ் மையத்துச் செலவுக்கும் பிறகு செய்யும்படியான சில சடங்குகளுக்கும் அவள் ஜீவியத்திற்கும் வேண்டிய ஒரு பெருந்தொகை பணமும் கபன், அத்தர், பன்னீர், அம்பர், கற்பூரம் முதலிய சாமான்களும் கொடுப்பித்துத் தேறுதல் சொல்லி அனுப்பினர்கள்.

சுபைதா நாயகியவர்கள் கொடுத்த அளவில்லாத சாமான்களையும், திரவியத்தையும் வாங்கிக்கொண்டு அவள் அபூநவாஸிடம் வந்து சேர்ந்து அரமனையில் நடந்த வரலாறுகளை ஒன்றுவிடாமல் சொன்னள்.

அப்பால் சில நிமிஷத்திற் கெல்லாம் சுல்தான் சுபைதா நாயகியவர்களின் மாளிகைக்கு வந்தார்கள். சுல்தானவர்களை நாயகியவர்கள் நோக்கி "என்ன, தங்கள் அருமையான விகட கவிராயர் விண்ணுலகம் அடைந்தாராமே, இனி எந்தக்காலத்தில் நீங்கள் அப்படிப்பட்ட ஒரு வித்வானைக் காணப்போகின்றீர்கள், அந்தோ! அந்தோ! அந்தோ!!" என்று கதறினர்கள். அதற்கு சுல்தானவர்கள் அரசியைப் பார்த்து "அபூநவாஸ் இறக்கவில்லை. அவன் இல்லாள் இறந்துவிட்டாள். அவள் பிரேதத்தை எடுக்கும்பொருட்டு என்னிடம் அவன் சற்று நேரத்திற்கு முன் வந்து பணம் பெற்றுச் சென்றான்" என்றார்கள். அதற்கு சுபைதா அவர்கள் "நாயகமே, இல்லை இல்லை. அவர் மனைவி என்னிடம் இப்பொழுதுதான் வந்து அபூநவாஸ் உயிர் துறந்த செய்தியைச் சொல்லி அழுது செலவுக்குப் பணம் வாங்கிக் கொண்டு போனாள்!" என்று கூறினர்கள். இவ்விதம் இருவரும் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து கொண்டு, இதன் உண்மையை அறியவேண்டு மென்ற எண்ணத்துடன் சுல்தான் உடனே அங்கிருந்த காவலாளி யொருவனை அழைத்து 'விகட சிங்கமாகிய அபூநவாஸ் அவர் வீட்டில் சுகமாயிருக்கின்ற செய்தியை அறிந்து அவர் சுகமாயிருப்பின் இவ்விடம் அழைத்துவா' என்று கட்டளையிட்டு அனுப்பி வைத்தார். உடனே காவளாளி அபூநவாஸ் வீட்டிற்குச் சென்று பார்க்கும்போது சுகமாக அவர் மனைவியுடன் பேசிக்கொண்டு இருப்பதைப் பார்த்து 'விகட களஞ்சியராகிய அபூநவாஸே, உம்மை சுல்தான் அழைத்துகொண்டு வரச்சொன்னார்' என்று சொல்லி, அபூநவாஸை அழைத்துக் கொண்டு போனன். அப்போது சுல்தானும் அவர்கள் மனைவியாகிய சுபைதா நாயகியும்

கொலு மண்டபத்தில் தங்கள் தங்கள் சிம்மாசனங்களில் வீற்றிருக்கும்போது அபூநவாஸ் அவர்கள் முன்னிலையிலே சென்று வணங்கி 'எனது கல்பு கனியாகிய நாயகமே, என்னை அழைத்தபடி வந்தேன்' என்றார். அப்போது சுல்தான் ஹாரூன் ரஷீது மிகுந்த கோபத்துடன் "ஏ அபூநவாஸே! உன் பெண்ஜாதி இறந்துவிட்டாள் என்று சொன்னீரே, அது உண்மையா? அல்லது பொய்யா?" என்று கேட்டார். அதற்கு சுல்தானே 'நான் உங்கள் இடத்தில பொய் சொல்லவில்லை. நான் சொன்னது முழுவதும் நிஜமே?' என்றார். அப்போது, சுபைதா நாயகியும் சுல்தான் ஹாரூன் ரஷீது 'கள கள' வென்று சிரித்துவிட்டு, அபூநவாஸே, 'ராஜ சபையில் உண்மை பேசும்' என்றார்கள். அதற்கு அபூநவாஸ் "நான் சொன்னதெல்லாம் சத்தியந்தான். அது எப்படி என்றால், என் பெண்ஜாதியிடம் எனக்கு வயது ஆகிவிட்டதென்றும் இன்னம் இரண்டொரு தினத்தில் என் உயிர் உடலைவிட்டு நீங்குமென்றும் ஆனதால் என்மையத்துச் செலவுக்கு நீ போய் சுபைதா நாயகியிடம் நான் இறந்து போனதாகச் சொல்லி செலவுக்காகக் கொஞ்சம் திரவியம் கேட்டு வாங்கிக் கொண்டுவா என்று சொன்னேன். அதற்கவள் 'உன் மையத்துச் செலவுக்கு நான் வாங்கி வரும் பக்ஷத்தில் எனக்கும் வயதாய்விட்டதே. என் மையத்துச் செலவுக்கு நீங்கள் போய் நமது சுல்தானிடம் பணம் வாங்கிக்கொண்டு வாருங்கள்' என்று சொன்னாள். அதுவும் சரிதான் என்று எண்ணி தங்கள் இடம் வந்து கேட்டேன்" என்றார். இவையனைத்தும் கேட்டுக்கொண்டிருந்த சுபைதா நாயகியும் சுல்தான் ஹாரூன் ரஷீதும் நிரம்பவும் ஆச்சரியப்பட்டுச் சிரித்து விட்டார்கள்.

28-வது கிஸ்ஸா

ஒருதினம் பகுதாது நகரத்தின் கடைதெருவில் ஒரு பெரியவர் பலதேச யாத்திரை செய்து புதிதாய் அந்தக் கடைதெரு வழியாக வரும்போது ஒரு சக்கிலி இரண்டு ஜோடுகளைக் கையில் வைத்துக்கொண்டு விலை கூறிக்கொண் டிருந்தான். யாத்திரிகர் சக்கிலியைப் பார்த்து 'உன் மனனத மகிழச் செய்கிறேன். எனக்கு அந்த ஜோடுகளை விலைக்குக் கொடு' என்று கேட்டார். சக்கிலி உடனே ஜோடுகளை அவரிடம் கொடுத்தான். அவர் அதன் பொருட்டு சக்கிலிக்கு ஒரு வெள்ளி காசுகொடுத்தார். சக்கிலி எனக்கு சந்தோஷம் வரவில்லை என்ருன். பிறகு இரண்டு வெள்ளி காசுகொடுத்தார். அப்போதும் சந் தோஷம் வரவில்லை என்ருன். பிறகு மூன்று வெள்ளி காசு கொத்தார். அப்போதும் என்மனம் சந்தோஷமடைய வில்லை என்ருன். அப்போதும் அந்தப் புதிய மனிதர் எனக்கு ஜோடுவேண்டாம் என்று அவைகளைச் சக்கிலி யிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். சக்கிலி உடனே அவரிடத்தில் வாதுசெய்ய ஆரம்பித்து விட்டான். அச்சம யத்தில் இந்நிகழ்ச்சிகளை அங்குவோர் இடத்தில் நின்று கேட்டுக்கொண்டிருந்த அபூநவாஸ் ஓடிவந்து 'அந்தச் சக்கிலியை நோக்கி எதற்காக ஊருக்குப் புதியவராயிருப்ப வரை இழுத்து மல்லாடுகிருய்' என்று அபூநவாஸ் கேட்டார். அதற்கு சக்கிலியன் சொன்ஞன் "நான் இந்த பஜாரில் நின்று இந்த ஜோடு இரண்டையும் விலைகூறி நின்றேன். அப்போது இந்த மனிதன் என் அருகில் வந்து உன்கையில் இருக்கிற ஜோடு இரண்டையும் எனக்குக்கொடுத்தால் உன் மனதை சந்தோஷப் படுத்துகிறேன். என்று சொன்னுர். அதன்படி நான் சம்மதப்பட்டு என் கையிலிருந்த ஜோடு இரண்டையும் கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு அவர் சொன்ன பிரகாரம் என் மனதை சந்தோஷப்படுத்

தாமல் மூன்றுதரம் மூன்று வெள்ளிகாசு கொடுத்தால் என் மனம் சந்தோஷப்படுமா?" என்று அபூநவாஸ் இடம் சொன்னான். இவையனைத்தையும் கேட்ட அபூநவாஸ் "நீ சொல்வதும் முற்றிலும் உண்மைதான். இப்போது உன்மனதுக்கு சந்தோஷம் வரும்படி நான் ஒரு செய்தி சொல்கிறேன். அதை நீ ஒப்புக்கொள்ள வேண்டியது என்று சக்கிலியிடம் உறுதி வாங்கிக்கொண்டு, வாதியாகிய ஜோடு வாங்கினவரை வாக்குமூலம் கேட்கும்போது, அப் புதியவர் சக்கிலி சொன்னதெல்லாம் உண்மையே. என் சொல்படியே நான் அவன் மனது சந்தோஷப்படும்படி மூன்று வெள்ளிகாசு கொடுத்தும் அவன் திருப்தியடைய வில்லை. ஆதலால் நான் அவனிடம் வாங்கின ஜோடுகளை அவனிடமே கொடுத்துவிட்டேன். அதற்கு என்னிடம் வீண் வழக்குப் பேசுகின்றான். நான் இந்த ஊருக்குப் புதியவன். எனக்கு இந்த ஊரின் போக்குத் தெரியாமல் இவனிடம் ஜோட்டை வாங்கிக்கொண்டேன். அவன் கொடுத்த ஜோட்டை திருப்பிக் கொடுத்தாலும் வாங்காமல் அதற்கு மூன்று வெள்ளிகாசு கொடுத்தாலும் வாங்காமல் என் மனம் சந்தோஷப்படவில்லை என்று சொல்கிறான். இது என்ன நியாயம் கேளுங்கள்" என்று சொன்னார். இதன் விவரங்களை ஆதியோடந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்த நமது விகடகவி நீர் சொல்வது சரி; உமது சொல்பிரகாரம் அவன் மனதை சந்தோஷப் படுத்துவதாகக் கூறிய உறுதி மொழிப்படி எந்த விதத்திலும் அவனைச் சந்தோஷப் படுத்தியே தீரவேண்டும் என்று சொல்லிவிட்டு அபூநவாஸ் சக்கிலியைப்பார்த்து 'நான் இந்த வழக்கைத் தீர்மானம் செய்வது உன்மனதுக்கு சந்தோஷமா இல்லையா' என்று கேட்டார். அதற்கு சக்கிலியன் 'இந்த ஊரை ஆளும் ஆருன் ரஷீது பாஷாவுக்கு ஓர் அற்புத கவிராயராக விளங்குபவராகிய நீர் தீர்ப்புச் சொல்வது என்மனதுக்கு நிரம்பவும் சந்தோஷம்! சந்தோஷம்!' என்று சொன்னான்

உடனே அபூநவாஸ் இதுதான் நல்ல சமயம் என்று எண்ணி சக்கிலியைப் பார்த்து 'அப்பா நீ கேட்ட பிரகாரம் உன் மனதுக்கு சந்தோஷம் வந்து விட்டபடியால் ஜோடு இரண்டையும் அவர் கையில் கொடுத்துவிடு' என்று சொல்லி விட்டார். அங்ஙனமே சக்கிலி ஜோடிரண்டையும் அப் பிரயாணியிடம் கொடுத்து நாம் சொன்ன சொல் நமக்கே கேடுவிளைத்ததே என்று எண்ணிக்கொண்டு வாய்திறவாமல் தலை குனிந்தவனாகப் போய் விட்டான்.

29-வது கிஸ்ஸா

ஒருநாள் ஓரிடத்தில் ஆடம்பரமான சபை கூட்டி அந்தச் சபைக்கு பாஷா ஆரூன் ரஷீது அவர்களையும் வெகு மரியாதையுடனும் அழைக்க, அவர்களும் அந்தச்சபை மண்டபத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள். அபூநவாஸ் விகடகளஞ்சியரானபடியால் அவரையும் அங்குச் சபையார் அழைத்திருந்தார்கள். அப்போது எல்லோரும் சபையில் வந்து கூடினபிறகு உட்காருவதற்கு இடமில்லாமல் சபை முழுதும் நிறைந்திருந்தது. அப்போது அபூநவாஸ் பாஷா ஆரூன் ரஷீது உட்கார்ந்திருக்கும் இடத்தில் சமீபத்தில் போய் உட்கார்ந்திருந்தார். அப்போது பாஷா ஆரூன் ரஷீதுக்கு நிரம்பவும் கோபமுண்டாகி, கொஞ்சமாகிலும் மரியாதையில்லாமல் நம்முடைய சமீபத்தில் இந்த அற்பன் வந்து உட்கார்ந்தானென்று எண்ணி "அடே அபூநவாஸே, உமக்கும் கழுதைக்கும் என்ன பரகுவுண்டும்" என்று கேட்டார். அதற்கு அபூநவாஸ் தான் யிருக்கிற யிடத்திற்கும் பாஷா ஆரூன் ரஷீது யிருக்கிற யிடத்துக்கும் தன் கையால் அளந்து பார்த்து விட்டு "எனக்கும் கழுதைக்கும் ஒரு ஜான்தான் குறைவாய் இருக்கிறது" என்று சுல்தானிடம் சொன்னார். இதைக்கேட்டவுடன் பாஷா ஆரூன் ரஷீதும் சபையாரும் விடாநகைப்பைக் கொண்டனர்.

முற்றிற்று.

111207

எதிர் பாருங்கள் ! எதிர் பாருங்கள் !!

லக்நௌ மௌலானா அப்துல்ஹை
மர்ஹூம் (றஹ்) அவர்கள்

குத்பா தர்ஜுமா

உத்தமபாளையம் ஹாஜி மௌலவி
S. S. முஹம்மது அப்துல் காதர் ஸாஹிபு (பாக்கவி)
அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
இதன் விலை ரூ. 3—0—0

ஸெய்யிதுனா இமாம் ஹுஸைன்
றலியல்லாஹு அன்ஹு அவர்களின்

ஷஹீதே கர்பலா

இச் சரித்திரத்தில், முஸ்லிம்களாகிய நாம் நம்மி லுள்ள பெரியார்களது சரித்திரங்களை வெளியிடுவதால், நமது இஸ்லாத்தின் நாகரீகம் இன்னதென உலகிற்கு வெளி படுத்தப்படுவதுடன், முஸ்லிம்களது ஆசாரம், மதபரி பாலனம், சமூக வளர்ச்சி ஆகியவைகளுக்கு உற்றதுணை யாக இருப்பதுடன், பொறுமை, உண்மை, நேர்மை, நியாயம், உறுதி ஆகியவைகளுக்கும் மனிதனுக்குச் சிற்சில சமயங்களில் ஏற்படும் திக்கற்ற நிலைமையிலும், கஷ்ட காலங்களிலும் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் இச்சரித்திரம் போதிக்கும் பாடங்களாகும்.

இது நமது ஒவ்வொரு முஸ்லிம் ஆண் பெண்களும் வாசித்து நமது பெரியார்களது ஜீவியமும் அவர்களுடைய தொண்டும் எந்த முறையில் யிருந்தது என்பதை உணர் வதற்கு அவசியமான நூலாகும். விலை ரூ. 3—0—0

(விரைவில் வெளிவரும்)

ஹாஜி மீரான் பிரஸ் & புக் டிபோ,
15, பள்ளப்பன் தெரு, திருவல்லிக்கேணி, மதறாஸ்.